தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உள்பட) விலை 16 புதிய காசு ★ வெளிநாடு 20 காசு—அலுவலகம்: 'தென்றல்,' சென்னை-6.

மலர் 8 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1992, புரட்டாசி 20(7-10-'61)சனிக்கிழமை | இதழ் 16

ஜனநாயகம்

கண்ணதாசன்

இதைக் கண்டுபிடித்தவன், நல்லெண்ணத்துடன் தான்கண்டுபிடித்தான்.

சர்வாதிகாரிகளால் உழப்பட்ட நிலங்களில், மனித சமுதாயத்தின் ரத்த ஆறு ஓடி, ஜனநாயகம் என்ற சோலையை உண்டாக்கியபோது அதற்காகப் பாடுபட்டவர்கள் விழாக்கொண்டாடினார்கள்.

அடித்தளத்திலுள்ளவர்களுக்கும் தர்மம் வேண்டுமென்பதே ஜனநாயகத்தின் முதல் முழக்கமாக இருந்தது.

நம்மை ஒருவன் ஆள்வதை விட, நம்மை நாமே ஆண்டு கொள்வதுதான் ஜனநாயகமென்று சொல்லப்பட்டது.

நம்மை ஆள்வது சரி.

'நாம்' என்பது யார்யார் ?

இந்தக் கேள்விகளுக்கும் பதில் கிடைத்தது.

நம்மால் தேர்ந்தெடுக்கப்படும் நாம்; நம்மையாள்வதே ஜனநாயகம்.

கேட்பதற்கு இனிமையாக இருக்கிறது.

சங்கீதம்போல் ஒலிக்கிறது.

ஆனால் நடைமுறையில் ஜனநாயகம்—

ஆராய்ந்து பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது.

வெறும் கூட்டத்தைக் கொண்டே ஜனநாயகம் எடை போடப்படுகிறது.

கூட்டத்தில் கணிசமான ஒரு பகுதியைத் தன் பக்கம் சேர்த்து விட்டால், மூடன் அறிவாளியாகிவிடுகிறான்.

கோழை வீரனாகி விடுகிறான்.

பாதி வேளையைத் தூக்கத்திலும், பாதிவேளையை காதல் ஏக்கத்திலும் கழிப்பவன்கூட, படைகளுக்குத் தலைமை தாங்குபவன்போல் பேசத் தலைப்படுகிறான்.

வெறும் பாரத்தை எடை போடும் எந்திரம்போல், கூட்டத்தை எடைபோடுகிறது ஜனநாயகம்.

ஏராளமான ஆடுகளை வளர்க்கும் வியாபாரிக்கு சமுதாயத்தில் மரியாதை இல்லை.

அந்த ஆடுகளுக்குச் சற்றுக் குறையாத மக்களை, சுற்றிலும் கொண்ட மக்களுக்கு ஜனநாயகம் மதிப்பளிக்கிறது.

தனியொரு மனிதனுக்கும் நல்ல சிந்தனை முறைகள் இருந்தால்,ஜனநாயகத்தின்பாதையே வேறாக ஆகியிருக்கும்.

அதனால்தான் தன்னை அண்டி வந்தவர்கள் சிந்திக்காதபடிப் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு, தலைவனின் பெரும் பொறுப்பாகி விடுகிறது.

வேறு எந்தத் தொழிலுக்கும் லாயக்கற்றவர்களுக்கு, ஜனநாயகம் வியாபாரச் சந்தை.

எந்தத் தத்துவத்தின் மீது ஜனநாயகம் நிறுவப்பட்டதோ, அந்த ஜனநாயகம் உண்மையிலேயே மக்களுக்காகவே ஆனது.

ஆனால், தர்மத்துக்காக உருவான சட்டங்களை, வாதத்தால் வளைத்துக் கொண்ட வக்கீல்களைப்போல், தர்மத்தைக் காக்க உருவான ஜனநாயகத்தை, தங்கள் வழிக்குத் திருப்பிக்கொண்டார்கள் பல அரசியல்வாதிகள்.

மக்களுக்காக தலைவர்கள் என்பது ஜனநாயகத்தின் அடிப்படை.

ஆனால் தலைவர்களின் வாழ்வுக்காக மக்கள் என்று ஆகிவிட்டது ஜனநாயகத்தின் நடைமுறை.

எந்தத் தலைவன் தன்னை மறந்து நாட்டை நினைக்கின்றானோ அவனே தகுதியுள்ளவனென்பது ஜனநாயகத்தின் அடிப்படை.

ஆனால், எவன் நாட்டின் பெயரால் நாடகம் போடுகிறானோ, அவனே கூட்டஞ் சேர்க்கத் தெரிந்தவன் என்கிறது நடைமுறை.

செல்லாக் காசுகளும் செல்லுபடியாவது ஜனநாயகம்ஒன்றில் தான்.

உளறுவதெல்லாம் அரங்கேறுவது ஜனநாயகம் ஒன்றில் தான்.

மன்னராட்சி முறையில், எல்லாம் இருக்கவேண்டிய இடத்தில் இருந்தது.

கொடுங்கோன்மை ஒன்று தான் சகிக்க முடியாததாக இருந்தது.

ஆனால் ஜனநாயகத்தில், நடக்க முடியாததென்று தனக்கே தெரிந்த ஒன்றை, நடத்திக் காட்டுவேன் என்று வீரம் பேசுவான் ஒருவன்.

அந்தப் பேச்சையே பெரும் வெற்றியாகக் கருதிக் கொள்வார்கள் மற்றவர்கள்.

உரக்கப் பேசத்தெரிந்தவனே உண்மையான ஜனநாயகவாதி.

ஒரே பொய்யை சாகும்வரைச் சொல்லிக் கொண்டிருப்பவனே தடம் புரளாத அரசியல் வாதி.

கோயில் மேளங்கூட கொள்கை பேச வந்துவிட்டது.

சரியாகவோ தவருகவோ, மன்னராட்சி முறையை விட மக்களாட்சி முறையில், கேடுகள் குவிந்து விட்டன.

நிழலுக்காக வளர்த்த மரத்தில், திருடர்கள் ஒளிந்து கொள்ளும் பொந்துகள் ஏராளம் ஏற்பட்டு விட்டன.

சர்வாதிகாரத்தில் ஒரே ஒருவனைச் சுமந்து கொண்டிருந்த மக்கள், ஜனநாயகத்தில் ஒவ்வொருவனையும் சுமக்க வேண்டியவர்கள் ஆனார்கள்.

சர்வாதிகாரத்தில் கேள்வி கேட்கமுடியாத அளவு அரசு நடந்தது.

ஜனநாயகத்தில் பதில் சொல்ல நேரமில்லாதபடி கேள்விகள் குவிந்தன.

சர்வாதிகாரத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அச்சமிருந்ததால், நாட்டு நடப்பு ஒழுங்காக நடந்தது.

ஜனநாயகத்தில் அச்சமே இல்லாமற் போனதால், நிர்வாகம் திணறுகிறது.

சர்வாதிகாரத்தில், அநியாயத்தைக்கூட வாதத்தால் தகர்க்கமுடியாது.

ஜனநாயகத்தில் நியாயமே வாதங்களால் தகர்க்கப்படுகிறது.

சர்வாதிகாரத்தில் ஒருவன் கொள்ளையடித்தான்.

ஜனநாயகம் கொள்ளையடிப்பதையும் ஒருவகை அரசியல் தர்மமாக ஆக்கிவிட்டது.

சர்வாதிகாரத்தில் சர்வாதிகாரி ஒருவனே பிரச்சினை,

ஜனநாயகத்தில், ஒவ்வொரு மனிதனும் பிரச்னை.

சர்வாதிகாரம் முடிந்த இடத்தில்தான் ஜனநாயகம் பிறந்தது.

ஆனால், சர்வாதிகாரத்தின் கெடுமை முடிந்த இடத்தில் நன்மை பிறக்கவில்லை.

அந்தக் கொடுமைக்கு இந்தக் கொடுமை சற்றும் குறைந்ததல்ல.

ஒரு கட்டத்தில் எந்தக் கொடுமையும் முடியும்.

முடிந்த இடத்தில் புதிய தத்துவம் பூத்தெழும்.

சர்வாதிகாரக் கொடுமை முடிந்தபோது ஜனநாயகம்பிறந்தது.

ஜனநாயகக் கொடுமை முடியும்போது சர்வாதிகாரம் பிறக்கும்.

—தொடர்ச்சி 7-ம் பக்கம்—

தொழிற்சங்கமும் சோஷலிசமும்

செ. து. சஞ்சீவி

சோஷலிச சித்தாந்தத்தை முழுமையாக உணர்ந்தவர்கள் முதல் தரமான தொழிற்சங்க வாதிகளாக இருக்க எண்ணுவதும், தொழிற் சங்கத்தில் தீவிர ஈடுபாடு கொண்டவர்கள் உண்மையான சோஷலிஸ்டுகளாகத் திகழ விரும்புவதும், மேற்கொண்ட துறையில் தூயநெறியைக் கடைப்பிடிப்பவர்களுக்குத் தவிர்க்க முடியாத குணம்சங்களாகவே அமைந்துவிடுகின்றன.

காரணம், இந்த இரண்டு குணம்சங்களும் தத்துவத்தின் போதனையாக மட்டுமின்றி நடைமுறைகளின் படிப்பினையாகவும் உருப்பெற்று வருவதேயாகும்.

தொழிற்சங்கத்திற்கும், சோஷலிசத்திற்கும் ஏற்பட்டுள்ள இந்த கவர்ச்சிகரமான உறவு முறைகள் கடந்த நூற்றுண்டுகளாகவே உலக அரசியலில் ஆக்கம் பெற்று வந்துள்ளன.

நிலப்பிரபுத்துவத்தின் நசிவிலிருந்து தோன்றிய முதலாளிவர்க்கத்திற்கும் பாட்டாளிவர்க்கத்திற்கும் இடையே அடிக்கடி எழும் வர்க்க நலன்களை ஒட்டிய போராட்டங்கள் ஒவ்வொன்றும் இந்த உறவுமுறைகளின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உரமிட்டு வந்திருக்கிறதென்பதையே வரலாறும் தெளிவுபடுத்துகின்றது.

தொழிற்சங்கத்திற்கும் சோஷலிசத்திற்கும் இடையே ஏற்பட வேண்டிய உறவுமுறைகள் பற்றிய தெளிவான கொள்கையை 1864 ல் தோன்றிய முதலாவது சர்வதேச தொழிலாளர் சங்கமே பிரகடனப் படுத்திற்று.

அன்று தொட்டு இன்றளவும் உலகிற்கும் அரசியல் உலகிற்கும், அதாவது, ஆளப்படுகின்ற பாட்டாளி வர்க்கத்திற்கும், ஆளுகின்ற முதலாளிவர்க்கத்திற்கும் இருக்க வேண்டிய உறவுமுறைகள் பற்றிய கடுமையான கருத்து வேற்றுமைகள், அரசியலில் இருவேறு முகாம்களாகவே செயற்பட்டும் வருகின்றன.

இதை ஒட்டி, தொழிற்சங்க இயக்கம், அரசியலிலிருந்துதனிமைப்படுத்தப்பட வேண்டுமென்பது முதலாளித்துவ ஏகாதிபத்திய வாதிகளின் கோட்பாடாகவும், அரசியலில் முதன்மைப்படுத்தப்பட வேண்டுமென்பது சமதர்மவாதிகளின் கோட்பாடாகவும் விளங்கி வருகின்றன.

இந்த இரண்டு கோட்பாடுகளும் இருவேறு முகாம்களாக செயற்பட்டு வருவதை நோக்கும்போது, இவை; இருதரப்பினரின் தனிப்பட்ட கொள்கை மோதல்கள் என்று யாரும் கருதி விடுவதற்கில்லை. ஏனெனில், இந்தக் கோட்பாடுகள் முழுக்க முழுக்க சமுதாயத்தின் நல்வாழ்வைப் பிரதிபலிக்கும் இருவேறு தத்துவங்களாகவே காட்சியளிக்கின்றன.

இந்த இரண்டு கோட்பாடுகளுக்கும் பிறப்பிடமாக விளங்கிய ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலும், இந்தக் கோட்பாடுகளால் ஆகர்ஷிக்கப்பட்ட ஆசிய ஆப்பிரிக்க நாடுகளிலும், இன்றளவும்இவை முற்றுப்பெருத போர்க் குணங்களாகவே இருந்து வருவதையும் நாம் கவனத்தில் கொள்ளத்தான் வேண்டும்.

மேலும், பாட்டாளி வர்க்கத்தின் கோட்பாடான சோஷலிஸத்தை முறியடிப்பதற்கு, முதலாளிவர்க்கம், தனிநபர் சுதந்திரம் என்ற தனது 'புனித'க் கொள்கையைபறைசாற்றி வருவதையும், அதையொட்டி தனது ஏகாதிபத்தியத்திற்கு சாசுவதமான சுகவாழ்வை உறுதிப்படுத்திக் கொள்வதற்காகவும், ஜனநாயகத்தின் பேராலும், ஜனநாயக சோசலிஸத்தின் பேராலும் பாட்டாளி மக்களை ஏய்த்துப் புறித்தும், இன்னல்களுக்கு உட்படுத்தியும், அவர்களின் உரிமை வேட்கையை அடக்கி ஒடுக்கிவருவதையும் உலக நாடுகள் பலவற்றின் (இந்தியா உட்பட) நடைமுறைகள் நமக்கு அறிவித்துக் கொண்டுள்ளன.

ஆனுல், அதே நேரத்தில், வர்க்கப் போராட்டத்தில் வெற்றிபெற்ற ருஷ்யா, சீனு போன்ற சோசலிஸ நாடுகளில், முதலாளிவர்க்கமே நிர்மூலமாக்கப் பட்டநிலையில், உழைப்பாளிமக்களும் நடுத்தரமக்களும் எவ்வித சுரண்டலுக்கும் ஆட்படாத நிலையில், சுதந்திரமாகவும் சுபிட்சமாகவும் வாழ்ந்து கொண்டிருப்பதையும் நம்மால் அறியமுடிகிறது.

இந்த இரு உண்மைகளுக்கிடையே, தொழிற்சங்கமும் சோசலிஸமும் என்ற கருத் தோட்டத்தையும் பொருத்திப் பார்ப்போமாஞல் மற்ருெரு உண்மையையும் புரிந்து கொள்ள முடியும். அதாவது, தொழிற்சங்கத்தை அரசியலினின்றும் தனிமைப்படுத்தியதன் காரணமாக நீடித்துவரும் இடர்ப்பாடுகளையும், முதன்மைப் படுத்தியதால் விளைந்துள்ள போற்றத்தக்க மகத்தான புதுவாழ்வையும் தெற்றென விளங்கிக் கொள்ளலாம்.

எனவே, மேற்குறித்த வரலாற்றுண்மைகளையும், யதார்த்த உண்மைகளையும் மனதிற் கொண்டு, சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிக்க விரும்புகின்ற எந்த ஒரு அரசியல் வாதியும் தொழிற் சங்கத்தை அரசியலில் முதன்மைப் படுத்த வேண்டியதன் இன்றியமையாமையை ஒப்புக்கொள்ளவே செய்வர்.

மேலும், சோஷலிஸ சித்தாந்தத்தை முழுமையாக உள்ளடக்கிக் கொண்டுள்ள கம்யூனிஸமும், அதை உருவாக்கிய அறிஞர் காரல் மார்க்சும், அவரால் தோற்றுவிக்கப் பட்ட முதலாவது சர்வதேச தொழிற் சங்கமும், உலக சமுதாயத்தின் உயிரோட்டமாகவுள்ள பாட்டாளி வர்க்கமே உலகை ஆட்சி செலுத்த வேண்டுமென்ற கொள்கைகளைத் தான் பறைசாற்றுகின்றன.

இதன் காரணமாகத்தான் சோசலிஸத்தை லட்சியமாகக் கொண்டுள்ள எந்த ஒரு கட்சியும் தொழிலாளர் வர்க்கத்தை ஒன்று திரட்ட வேண்டிய அவசியமும், தொழிலாளரின் ஆதரவைப் பெறவிரும்பும் கட்சியினர் தங்கள் லட்சியமும் சோசலிஸமே என்று கூறவேண்டிய நிர்பந்தமும் இன்று தவிர்க்க முடியாத அளவுக்கு மேலோங்கி விட்டன.

ஆனுல், அதேநேரத்தில் உலக நாடுகள் பலவற்றுள் குறிப்பாக பிரிட்டன், பிரான்சு, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்திய நாடுகளில் பாட்டாளிவர்க்கத்தின் போர்க்குரல் வெகுவாக மந்த கதியிலேயே ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

காரணம், அங்கெல்லாம் முதலாளித்துவத்தின் போர்த்தந்திரம், பாட்டாளிவர்க்கத்தின் எழுச்சியை மட்டுப்படுத்திவிடுவதோடன்றி அவற்றின் கோரிக்கைகளை சிறப்பான வகையில் நிறைவேற்றித்தரவும் ஆவன செய்கின்றன.

உதாரணமாக பிரிட்டனில், 'தொழிற்கட்சி' சில சந்தர்ப்பங்களில் ஆளுங்கட்சியாக வாய்ப்புப் பெறுவதன்மூலம், ஜனநாயகத்தின் பேராலே பாட்டாளிவர்க்கம் தனது விழைவுகளை பெருமளவில் ஈடுபற்றிக்கொள்ள முடியுமென்ற நம்பிக்கையும் அங்கு வேரூன்றி விட்டது.

அடுத்தபடியாக, பிரான்சிலும், அமெரிக்காவிலும் தொழிற்சங்கங்கள் மாபெரும் அரசியல் சக்திகளாக வளரமுடியாமல் தடுக்கப்பட்டுள்ளன. எனினும்இந்தத்தடைகள் நீடிப்பதற்குள்ள முக்கிய காரணம், அங்கு தொழிலாள மக்களின் வாழ்க்கைத்தரம் கணிசமான அளவுக்கு உயர்த்தப்பட்டு வருவதேயாகும். தொழிற்சங்க இயக்கம் சோஷலிச இயக்கமாகப் பரிணமிக்காததன் காரணமாகத்தான் மேற்குறித்த நாடுகள் முதலாளித்துவ ஏகாதிபத்திய நாடுகளாகவே இன்றளவும் நீடித்து வருகின்றன.

இந்த ஏகாதிபத்திய நாடுகளின் சாசுவதத்தன்மையை அழித்தொழிப்பதற்கு சோசலிச நாடுகளின் மகத்தான வெற்றிகளும் அதை ஒட்டிய பாட்டாளிவர்க்க எழுச்சியும் பெருமளவில் எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், பொதுவுடைமையை எதிர்த்து எழுந்த ஜனநாயக சித்தாந்தங்கள் அனைத்தும், சித்தாந்த அடிப்படையில் அதை முறியடிக்கும் முயற்சியில் இன்றளவும் வெற்றி பெறவேயில்லை. மாருக, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் குறிப்பிட்டது போன்று, "எல்லார்க்கும் எல்லாம் என்றிருப்பதான இடம் நோக்கி நடக்கின்ற திந்தவையம்" என்ற யதார்த்த உண்மையைத்தான் பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. எனவே, தொழிற்சங்க இயக்கத்தின் மூலம் சோஷலிஸத்தை நிர்மாணிக்கும் பணிகள், ஏகாதிபத்திய நாடுகளில் தடைபடுத்தப் பட்டிருப்பது உண்மையே என்ருலும், சோசலிசத்தை முழுக்க முழுக்க புறக்கணித்துவிட முடியாத நிலையிலேயே அவை இருந்துவருகின்றன என்பதிலிருந்து, சோசலிசம் மகத்தான ஒரு கால கட்டத்தை அணுகிக் கொண்டிருக்கிறதென்பதை உணர்ந்து கொள்ளலாம்.

அடுத்தபடியாக, இந்தியாவில் தொழிற்சங்க இயக்கத்தின் நிலவரங்களை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வோம்.

வெள்ளை ஏகாதிபத்தியம் இங்கு வேரூன்றியிருந்த காலத்தில், வெள்ளையர் சிலரால் நடத்தப்பட்ட தொழிற்சாலைகளில் உழைத்து வந்த தொழிலாள மக்களின் நலன்களை ஒட்டி ஆங்காங்கே சில தொழிற் சங்கங்கள் தொடங்கிவைக்கப் பட்டிருந்தன.

ஆரம்பகாலத்தில் அந்த தொழிற் சங்கங்களின் லட்சியம், வெள்ளை முதலாளிகளிடமிருந்து சில சலுகைகளைப் பெற்று சம்பந்தப்பட்ட தொழிலாளர்களின் நலன்களை மேம்படுத்துவதேயாகும்.

காலப்போக்கில், வளர்ந்து வந்த தொழிற்சங்க இயக்கம், அப்போது விடுதலை இயக்கத்தை நடத்தி வந்த தலைவர்களால் ஆகர்ஷிக்கப்பட்டு விடுதலை இயக்கத்தில் இரண்டறக் கலந்தும் செயற்பட்டு வந்தன்.

இந்தச்சந்தர்ப்பத்தில்தான், அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ், என்ற ஸ்தாபனம் உருவாக்கப் பட்டது.

இந்தஸ்தாபனம் நன்கு செயற்பட்டு வந்த நிலையில், இயக்கத்திலிருந்த முற்போக்கு அரசியல்வாதிகள் பலர் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்துசென்று, காங்கிரஸ் சோசலிஸ்ட் கட்சியென்றும், கம்யூனிஸ்ட் கட்சியென்றும் இரண்டு புதிய கட்சிகளை தோற்றுவித்தனர்.

புதிய கட்சிகள் இரண்டும் சோசலிஸத்தையே தங்கள் இலட்சியமாக ஏற்றுக்கொண்டதன் காரணமாக, அவை தொழிற்சங்கங்களையே பிராதான சக்தியாக உருவாக்க முனைந்தன. இந்தக் கட்டத்தில் நேர்ந்த பலப்பரீட்சையின் விளைவாக அ. இ. தொ. சங்க காங்கிரஸ் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திற்கு உட்படுத்தப் பட்டது. அதே நேரத்தில் வேறு பல தொழிற் சங்கங்களை கைப்பற்றிய காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சி'இந்துமஸ்தூர்சபா' என்ற ஒரு ஸ்தாபனத்தைத்தொடங்கிவைத்தது

இந்த இரண்டு ஸ்தாபனங்களும் பெயரளவில் தனித்தனியாக இருந்து வந்தபோதிலும் வெள்ளையனை எதிர்க்கும் முனைப்பில் ஒன்றுபட்டே செயலாற்றி வந்தன. ஆனுல், சுதந்திரத்திற்குப் பின்னர், காங்கிரசு கட்சியினர் ஆட்சிபீடமேறியதும் இந்த இரண்டு கட்சிகளும் தங்கள் கொள்கைகளிலுள்ள வேற்றுமைகளை வெளிப்படுத்தின.

அவை, தேசத்தின் பொருளாதார அபிவிருத்தியை செம்மைப்படுத்துவதில் காங்கிரஸ் சோஷலிஸ்ட் கட்சியும், வெள்ளை ஏகாதிபத்தியத்தை வெளியேற்றியதுபோலவே வெள்ளை முதலாளித்துவத்தையும் வெளியேற்ற வேண்டுமென்பதில் கம்யூனிஸ்ட் கட்சியும் அதிக அக்கரை செலுத்தின.

மேலும், இந்தியாவில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதிலும், கம்யூனிசத்தை நிர்மாணிப்பதிலும் பெருந்தடையாகவுள்ள காங்கிரஸ் கட்சியை ஆட்சிப்பொறுப்பிலிருந்து அகற்றவேண்டுவது, மேற்படி கட்சிகளின் ஒருமித்த பணியாக இருந்ததால், அவை தங்களுக்குள்ள தொழிற்சங்க பலத்தை இத்துறையில் தீவிரமாகப் பயன்படுத்த முனைந்தன.

இந்தக் கட்டம் காங்கிரஸ் கட்சிக்கு ஒரு பெரும் சோதனையாக உருவெடுத்தது.

அப்போது உள்நாட்டு அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் அவர்கள், இந்த இரண்டு கட்சிகளின் நடைமுறைகளையும் தீவிரமாகப் பரிசீலனை செய்து, காங்கிரஸ் கட்சியின் எதிர்காலத்தையும் கவனத்தில் கொண்டு ஓர் முடிவிற்கு வந்தார்.

அந்த முடிவு, சோஷலிஸ்ட், கம்யூனிஸ்ட் கட்சிகளின் தொழிற் சங்க அணிகளை உடைத்தெறியும் போர்த்தந்திரமாக விளங்கியது. அதன்படி உருவாக்கப்பட்டதே, 'இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரஸ்' என்ற இயக்கமாகும்.

...தொடர்ச்சி 11-ம் பக்கம்...

நமது விளக்கமும் அவர்கள் கலக்கமும்!

நெய்வேலி ம. சீதாராமன்

தமிழ்த் தேசியக் கட்சி மாநாடு நடத்துகிறது என்ற செய்தி, ஏற்கனவே தமிழ்த் தேசியக் கட்சியின் தோற்றத்தால் அதிர்ச்சி அடைந்திருந்த முன்னேற்றக் கழகத்தின் மூலவருக்கு மூளைக் குழப்பத்தையே உண்டாக்கிவிட்டது. கட்சி தோன்றிய ஐந்து மாதத்திற்குள் மாநாடா? என்று எழுந்த கேள்விக்குறி காய்ப்பாக உருவெடுத்தது. அதிலும் மாநாடு மூன்று நாட்கள். முதல் நாள் முத்தமிழ் மாநாடு. தமிழகத்திலுள்ள தமிழ்ப் புலவர்கள், பல்வேறு அரசியல் கட்சித்தலைவர்கள், கலந்து கொள்கிறார்கள் என்ற செய்தி, பொதுவாக இன்றைய அரசியல் கட்சிகளில் தமிழ்நாடு, தமிழ் இனம், தமிழ் மொழி ஆகியவற்றிற்காக பாடுபடுகிறோம் என்று துணிந்து கூறும் அளவிற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தை விட தகுதியும், யோக்கியதையும் படைத்த அரசியல் கட்சி வேறு எதுவும் கிடையாது என்று கழகத்தின் "நாவாயா"க விளங்கும் நாவலர் மேடைதோறும் எழுப்பி வந்த சிங்கக் கர்ஜனையை, சிங்கத் தோல் போர்த்திய கர்த்தபத்தின் கதறலாகக் காட்டிற்று. தமிழ்த் தேசியக் கட்சியினர் தமிழின் பால் கொண்ட உணர்வையும், தாய் மொழியைத் தாயினும் மேலாகக் கருதும் தகுதியினையும், வாய்ச் சொல் வீரராக இல்லாமல் செயல் தீரர்கள் இவர்கள் என தமிழகம் தெரிந்து கொள்ளும் அளவில் இம் முத்தமிழ் மாநாடு அமைந்தது. எந்த இனத்தின் நுழைவால் நம் தமிழர்கள் இனமே தாழ்ந்துபோயிற்று என்று மேடை அதிரப் பேசினார்களோ, எந்த வர்ணாசிரம தர்மத்தை ஒழிப்பதின் மூலம் சாதியை அறவே ஒழித்து விட முடியும் என எந்த மூலவர் முழங்கினாரோ, அதே சாதியைக் காப்பாற்றுவேன், சாதி ஒழிந்து கொண்டு வருவது தர்மம் செத்துக் கொண்டு வருவதாகும் என்று துணிந்து கூறிக்கொண்டுவரும் ஆச்சாரியாருடன் குலவிக்கொண்டு திரியும் திருவாளர் கூட்டத்திற்கு தமிழ்த் தேசியக் கட்சியின் இரண்டாம் நாள் மாநாடு கலக்கத்தை உண்டாக்கி விட்டது. தந்தை பெரியாரின் பிரிவுக்குப் பிறகு சமுதாய சீர்திருத்த செம்மல்கள் என தங்களை வெளிப்படுத்திக் கொண்ட வேடதாரிகள், இவர்கள் என்ன செய்தார்கள் சாதி ஒழிப்புக்கு என்று மக்கள் கேட்கும் நிலை ஏற்பட்டால் வேடம் கலைக்கப்பட்டு பவுடர் பூசிய முகமும் கழுவிக் களையப்பட்டு "ஒரிஜினல்" தெரிந்துவிடுமே என்ற ஏக்கத்திற்கு ஆட்பட்டுவிட்டனர். புரட்சிக் கவிஞர் குறிப்பிட்டபடி இனம் இனத்தோடு சேர்கிறது என்று மக்கள் புரிந்து கொண்டனர். இம் மாநாட்டிலும் பல்வேறு அரசியல் தலைவர்கள் கலந்து கொள்கிறார்கள் என்ற செய்தி அரசியல் அநாகரிகங்களுக்கு அரிப்பை ஏற்படுத்தியதில் வியப்பொன்றுமில்லை. இச்சிறப்பு மிகு மாநாட்டின் அலுவல்களைச் சீரழித்துவிடவேண்டுமென்று தீவிரமாகக் கருதினார்கள். அதற்காக அவர்கள் கண்ட ஒரே வழி, கண்ட என்பதைவிட கையாளும் ஒரே வழி செப்டம்பர் 15, 16, 17 ஆகிய நாட்களில் ஊர்வலம் நடத்துவது என்ற முடிவினைத் தந்தது. ஊர்வலம் நடத்த ஆள் தேவை! என் செய்வது. கூட்டம் கூட்டிக் காட்டவேண்டுமென்ற நிலை. செப்டம்பர் 16-க்கு புது வியாக்கியானம் கொடுத்தனர். உலகு காணாத அதிசயம் தொழிற் புரட்சி செய்து காட்டிய ருஷ்யாவே வியக்கும் அளவிற்கு தொழிலாளர் தினம் செப்டம்பர் 16 ஆயிற்று. மே தினம் தானே என்று எந்த முட்டாளும் கேட்கக் கூடாது. இதில் கருத்துமாற்றம் என்றால் ரிக்ஷா தொழிலாளர் தினம் என்று வைத்துக்கொள்ளலாம். கூட்டம் கூட்ட வழிகண்டாயிற்று. ஊர்வலத்தில் கலந்துகொள்வோருக்கு 'ஊர்வல உணவு ரசீது" கையில். அரை நிஜார் பேர்வழியாக இருந்தாலும் சரி அண்டர்டிராயர் பேர்வழியாக இருந்தாலும் சரி. நிபந்தனை கிடையாது. இந்த நேரத்தில் 'வில்லியம் ஜேம்ஸ்" என்ற அறிஞரின் சொல் கவனத்திற்கு வருகிறது. ஓய்ந்து ஒடுங்கிவிட்ட ஒரு கூட்டத்திற்கு அவர் தரும் அறிவுரைகள் "உற்சாகம் இழந்து விட்டீர்களா? அதைத் திரும்ப அடைய ஒரு ராஜ பாட்டை இருக்கிறது. உற்சாகமாக எழுந்து உட்காருங்கள். உற்சாகமாக நடந்து கொள்ளுங்கள். உற்சாகமாக பேசுங்கள். துணிச்சலை வரவழைத்துக்கொள்ள வேண்டுமா? அப்படியானால் துணிச்சல் உள்ளவர் போல நடியுங்கள். முழு மனதோடுஉறுதியுடன் நடியுங்கள். குலைநடுக்கத்திற்கு பதில் வீராவேசம் உண்டாகும்." தமிழ்நாட்டு அரசியலையே நாடக மேடையாக்கி விட்ட ஆர்பாட்டக்காரர்களின் ஊர்வலம் நடக்கிறது என்றதும் ஊர்க் காவலர் வாளா இருக்கமுடியுமா? ஊர்வலம் என்ற பெயரால் இந்த ஊதாரிகள் விளைவித்த ஊறுகள் எத்துணை? காலணிப்பஞ்சம் நாட்டில் வந்துவிடுமோ என்ற ஐயம் வேறு! காவல்துறைபெரிய அதிகாரி ஊர்வலத்திற்குத் தடை விதித்தார். தடை என்றதும் ஊர்வலம் நடத்த வேண்டியதின் அவசியம் பற்றி திருவாளர் அண்ணாத்துரை விளக்கம் கொடுத்தார். காவல் துறையினரே! அஞ்சற்க. இவ்வூர்வலம் எங்கள் பலத்தைக் காட்டுவதற்காக என்றார்.

இந்தப்பலப்பரீட்சையின் விளைவுகளை அறிந்தவர்கள் இயற்கையாவே அச்சம் கொண்டனர், ஏதோ காட்டில் உள்ளவைகள் நாட்டை நோக்கி வருவதுபோல உடனே மூலவர் அதை உறுதிப்படுத்தினர். சிங்கம் சிறுநரிக் கூட்டத்தோடு மோதுமா? எங்களோடு மோத வேண்டுமானால் காங்கிரஸ்காரர்கள் தண்டால் பழகி, பஸ்கி எடுத்து, கசரத்து பழகிவிட்டு வரவேண்டும்! என்று பலாத்கார வாடை கலந்த சொற்களையே உபயோகப்படுத்தினர். தடை தளர்த்தப்படவில்லை. தடையை மீறுவோம் என்று அறிவித்தார்கள். அவர்கள் கருதியதெல்லாம் நாட்டுமக்கள் பாரீர்! வீரம் பாரீர்! தடை உடைபடுகிறது! என்று எண்ணுவார்கள் என்று. ஆனால் ஊர்வலத்தாலேயே இன்றைய அரசியலை நடத்துபவர்கள், ஊர்வலத்திற்கு காரணம் ஒன்றைக் கூறி, வேறு ஒன்றை நடத்துபவர்கள் இவர்கள் என்ற எண்ணம் மக்களிடம் வேர்பிடித்து விட்டது. கூடுகின்ற கூட்டத்திற்கு வேலை கொடுக்கவேண்டும், என்பதும், கூட்டத்தைக் கூட்டி நாட்டு மக்களுக்கு எங்களுக்கு நலிவு இல்லை என அறிவிக்க வேண்டும் என்ற பெரு நோக்கோடு பலத்த பொருட்செலவில் இந்த ஊர்வலம் நடந்தது. தேசியத்திற்கு இலக்கணம் கூறிய மூலவர் தேசியம் என்பது என்ன தெரியுமா? நெட்டையாக உள்ளவர்களே ஒருபுறமாக வாருங்கள் என்றால் அது நெட்டை தேசியம், குட்டையாக உள்ளவர்களே ஒருபுறமாக வாருங்கள் என்றால் அது குட்டை தேசியம். இசை தெரிந்தவர்களே ஒருபுறமாக வாருங்கள் என்றால் இசைதேசியம் என்று சென்னைக் கூட்டத்தில் விளக்கம் தந்தார். அவர் கருத்துப்படியே சென்னையில் மக்கள் இரண்டு தேசியத்தைக் கண்டனர். தமிழ்த் தேசியம்-பண்பாளர்கள், கொள்கை உறுதிபடைத்தோர்; தமிழக அரசியலில் தரமானவர்கள் என்ற பிரிவு அணியினைக் காட்டிற்று.

திராவிட தேசியம் - அரைநிஜார்; அண்டர்வார்கள்; பரட்டைத்தலையர்கள்; சுகபோகிகள், சுயநலக்காரர்கள், அரசியல் தெரியாத ஆர்பாட்டக்காரர்கள் என்று காட்டியது. ஊர்வலம் சென்றவர்கள் ஒரு நாயின் கழுத்தில் பட்டை கட்டி அதில் கழகக் கொடியினை சொருகி அழைத்துச் சென்றனராம். நாயின் நன்மை குறித்து குறிப்பிட்ட அடிகளார் இனப்பகை காட்டுவது என்று கூறினார்கள். இச்செய்கை, அவர்களின் தரத்தை விளக்குவதாகவே அமைந்து விட்டது.

மாநாட்டின் மாட்சியினைக் கண்டோர் இன்றைய அரசியலில்தோழர் சம்பத் அவர்களுக்கு தனியான ஒரு செல்வாக்கு உளது என்பதை உணர்வர். மாற்றுக்கட்சினராயினும் தனியான மதிப்பை தோழர் சம்பத் அவர்களுக்கு அளிக்கின்றனர் என்பதற்கு இம்மாநாடு ஒரு விளக்கமாகும். ஒரு அரசியல் கட்சி கூட்டுகின்ற ஒரு மாநாட்டில் பல்வேறு தலைவர்கள் கலந்துகொண்டார்கள் என்பது இதுவரை தமிழகம் காணாத தலைவரென கூறிக்கொண்டோர் முயலாத ஒரு நிகழ்ச்சியாகும். மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றியவர்களின் பெருநோக்கும் அவர்கள் நம்பால் காட்டும் பற்றும் காணத்தக்கது. திருமிகு. குன்றக்குடி அடிகளார் தமிழில் தேசியம் என்ற தலைப்பில் என்னைப் பேச பணித்திருக்கலாம் என்று அன்பு வேண்டுகோள் விடுத்தது, நமக்கு எவ்வளவுஅருகில் அவர் வந்துவிட்டார் என்பதையும் நம் கொள்கை, நம்பணி எந்த அளவிற்கு ஈர்த்துள்ளது என்பதும் சொல்லாமலே புரியும். கடந்தகாலத் தமிழகம் மூதாதையர் புகழ் சொல்லி தாலாட்டுப் பா அமைக்கவல்லதாக இல்லை. நிகழ்காலக் தமிழகம் தோழர் சம்பத்அவர்கள் தலைமையின்கீழ் தமிழகத்திற்கு விடுதலை கிடைக்கச் செய்து, தமிழர்களை ஓரணியில் திரட்டி, நம் சந்ததியார் நம் புகழ்பாடச் செய்யவல்லது என்று குறிப்பிட்டதைக் காணும்போது நமது சக்தி நாட்டிற்கு புரிய, தெளிவாக்குவதாக அமைகின்றது. தமிழிற்கு இழுக்கு வந்துற்ற இந்த நேரத்தில் தமிழ் காக்க தமிழ்கொடியின்கீழ் திரண்டுள்ள இவ்வணியைக் கண்டபின் தமிழ் மாதாவிற்கு இனி எவ்வித ஆபத்தும் இல்லை என்ற பேச்சு நம் வீரத்திற்கு விளக்கமாகவும்நம் செயலாற்றலில் உள்ளசெழுமையினையும் புலப்படுத்துகிறது. முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. அவர்களின் முழக்கம் மாநாட்டிற்கு முத்தாய்ப்பாக விளங்கியது. இன்றைய அரசியலில் இருப்பவரைவிட தமிழகத்தில் ஒதுங்கியுள்ள ஏழுமடங்கு மக்களை தன் வயமாக்கக் கூடியது தமிழ்த் தேசியக் கட்சி தான் என்று கூறியது நடைமுறையில் காணுகின்ற உண்மையாகவே அமைந்து விட்டது. மற்றும் தோழர் ப. ஜீவா, தோழியர் டாக்டர் விசயலட்சுமி எம். ஏ. எம். லிட், அவர்கள் உரைகள் நமதுகொள்கை நாட்டிற்கு எவ்வளவு நலம் பயப்பதாக உள்ளது என்பதை அரசியல் உன்மத்தர்கள் அறியவும், ஏய்ப்பர்கள் அரசியல் வாழ்வை விட்டு

தொடர்ச்சி 10-ம் பக்கம்———

விடி வெள்ளி

(தமிழ்த் தேசிய நாளிதழ்)

இப்போது நேரந்தவறாமல் வெளிவந்து கொண்டிருக்கிறது

★

கீழ்க்கண்ட ஊர்களுக்கு விற்பனையாளர் தேவை : விண்ணப்பிக்கவும்.

திருப்பூர்	மணப்பாறை
மாயூரம்	பரமக்குடி
கோபிச்செட்டிப்பாளையம்	இடைப்பாடி
ஆலந்தூர்	டால்மியாபுரம்
கோவை	வேலூர் (வ. ஆ.)

நிர்வாகி

விடிவெள்ளி :: சென்னை-6.

கவிஞன் கண்ட அரசியல்

உடுமலை. பண்ணன்

(முத்தமிழ் மாநாட்டில் பாடியது)

தமிழ்த்தாய் வாழ்த்து

அன்னை யாயினள் அங்கண் ஞாலத்
தான்ற சேய்பல ஈன்று புறந்ததால்!
தொன்மை யாயினள் தான்பிறந் துயர்ந்த
தொல்லை நாளெது என்ப தில்லையால்!
கன்னி யாயினள் காலம் யாவிலும்
காட்சியோடியங் கிமாட்சி யெய்தலால்
அன்னையாம் மிகுதொன் மையோடிளங் கன்னியாம்
ஆயிழைத் தமிழ்த்தா ளினைப்பணிந் தேத்துவேன்!

தாயக வாழ்த்து

முப்பு றங்கடல் சூழ நின்றிடும்;
முத்தம் சங்கமும் சேர்ந்தி லங்கிடும்;
ஒப்ப ரும்பயன் களோங்கு மாமலை
ஒழுகு தேனெனப் பாயும் தீம்புனல்
செப்ப ரும்பணி செய்யும் மாந்தரும்
செறிந்தி லங்கிடும் சீர்மை பூண்டுள
இப்பு லத்திசை என்றும் வாழ்ந்திடும்
இந்த மிழ்வள ரென்னகம் வாழிய!

வேங்கை போலும் மறமுடை ஆண்மையர்
வெற்றி வாழ்விலும் வீரச் சாவிலும்
தேங்கு மார்வமும் தூய நெஞ்சமும்
தீஞ்சொல் மாதரின் தெளிந்த காதலும்
ஓங்கும் மேன்மையாய் ஒப்பும் காளையர்
ஒளித ரமனை பேணும் மங்கையர்
பாங்கு றப்பயன் வாழ்வு கண்டிடும்
பைந்த மிழ்ப்புகழ்த் தாயகம் வாழிய!

பாரதிக்குப் பின்னரெவர் என்கின்ற கேள்வி
பிறவாமுன் தமிழ்மண்ணில் பொலியத் தோன்றி
சீரெதிலும் குறைவில்லாச் செழுமைசால் புலமை
சிறந்திடவே திகழ்ந்தின்றும் தமிழைக் காத்தும்
ஏருழவர் போலெங்கள் உள்ளந் தன்னில்
எழிற்கவிதைப் பயிர்வளர்க்கும் கவிஞர் கோவே!
நேரிருகை கூப்பியுன்நெறி நினைத்து வாழ்த்தி
நெஞ்சமெலாம் பூரிக்கநான் வணங்கு கின்றேன்.

பாரதிக்கு நற்றுணையாய் நின்ற தாலே
பான்மையுடைத் தாசனெனப் பெயர்கொண்டாயோ?
பேறெதிலும் குறைவில்லாப் பைந்தமி ழமண்ணில்
பிறந்ததினால் இயற்புலமை பெற்றார் கொல்லோ!
போர்த்திரையும் கடற்புதுவை ஈன்ற தாலே
புரட்சியெனப் பெயர்பூண்டு நிலைக்கின்றாயோ!
நேருனக்கு எவருண்டு எதிர்ப்போர் யாரே!
காரொன்றும் உண்டஃதும் காலத் துண்டே!

உடன் கவிதை பாடுவோர்

(வேறு)

தரங்க மாடிடும் தலைநகர் சென்னையில்
அரங்கத் தென்னுடன் ஆய்தமிழ்க் கவிதையை
உரங்கொள் நெஞ்சுடன் யாத்து மொழிந்திடும்
திறங்கொள் கவிஞரே! கரங்கள் கூப்பினேன்.

மன்றம்

வீடு காத்திடும் வண்மைத் தாயரும்
நாடு காத்திடும் நற்றிறத் தாடவர்
பீடு காத்திடும் பொற்புடைப் பெரியரும்
கூடு மன்றிதைக் கூப்பித் தாழ்குவேன்.

கவிஞன் கண்டவோர் அரசியல் எனும்பொருள்
கருத்தில் கொண்டெழில் கவிதை யாத்துவந்
திவர்ந்திம் மன்றினில் இயம்பிடு கென்றெனக்
கினிய வாய்மொழிக் கட்டளை தந்தநல்
உவந்து அன்புசெய் உற்ற நண்பர்க்
கிவணும் நன்றியை உரைத்து, ஏற்றதைத்
தவழ்ந்தி டும்தமிழ்த் தண்டமிழ்க் குழவியின்
தரள வெண்ணகைச் சொற்களில் தொடர்குவேன்

தலைப்பின் காரணம்

ஆட்சிபுரி மாமன்றில் அமர்ந்துள் ளோர்கள்
அரசியலின் முறைமறந்து நடப்ப தாலோ?
மாட்சியுடை நல்லரசு வாழ்ந்த நாட்டில்
மொழிபேணாப் பொல்லாங்கும் சூழ்வ தாலோ?
காட்சியினால் கைப்பொருளால் அரசு கட்டில்
கைப்பற்றும் வழக்கிங்கு மலிந்த தாலோ
மீட்சிவழி நாட்டிற்கு விழைந்து நிற்போர்
மொழிப்புலவன் அரசியலை வேண்டி னாரோ?

கவிஞன்

சங்கமெனும் அறிவாளர் மன்றில் வீற்றுச்
செந்தமிழை வளர்த்தபெரும் புலர்வா ருண்டு;
மங்காத இலக்கியநற் செல்வம் தந்து
மாண்பமைந்தோர் புகழ்நிறுத்தி மறைந்த பின்னே
திங்களினை முடிசூடும் பெம்மான் மற்றும்
திருவரங்கத் தேவனையும் பாடிப் போந்தோர்
அங்கவர்பின், 'சீட்டு,சித்ர, சரப, ஆசு
அருங்கவிதை புனைந்தோரும் பலரும் உண்டே!

(வேறு)

தென்னவர் மண்ணில் திகழ்ந்த பாவலர்
அன்னார் யாவரும் கவிஞர் தாமரோ!
உன்னின் அவர்க்கெலாம் ஒளியாய் நிற்பவன்
முன்ன வன்குறள் நூல்தரு வள்ளுவன்!

ஞால மெங்கணும் வாழு மாந்தரும்
காலம் யாவிலும் ஏற்கும் தன்மையால்
மாலி லாப்பொருள் யாவும் கண்டவன்
கோல மானவோர் மாமறை தந்தவன்.

இன்றுமந் நாவலன் நன்னெறி பேணிடில்
என்றும் தீங்கிலா இன்வழி காணலாம்
நன்றும் நேர்மையும் நாட்டிற் சிறக்கலாம்
என்றதால் கவிஞன் என்ன ஏற்பனே!

வள்ளுவனின் அரசியல்

(வேறு)

கோடாத செங்கோன்மை அரசு என்னும்
களங்கமிலாப் பெரும்பணியின் உயிர்மூச் சாகும்
வாடாது நிலஞ்செழிக்க வானம் பெய்யும்
வளமோடு உயிரினங்கள் உலகில் நண்ணும்
மூடாத இமையோடு மன்பு காக்கும்
முதன்மையர்க்கும் முதற்பாடம் செங்கோல் பேணல்
தேடாது நல்லமைதி மாந்தர் வாழ்வில்
தளிர்த்திடும் தூய்மையதும் தானே தேங்கும்.

கல்வியொடு அறிவாளர் பெருக்கம் நாட்டில்
கனிவான நல்லரசின் வளர்ச்சி காட்டும்
செல்வமெனில் குடிகளிடை ஆணை போக்கிச்
சுருட்டுவது என்பதெனில் நெடுநா ளாட்சி
செல்குவதும் பல்குவதும் அருமை; ஆய்ந்து
சீரான முறைவகுத்துப் பொருளை ஈட்டல்
நல்வளமார் அரசாகும் மக்கள் கூட்டம்
நலிவின்றி வாழ்வதனால் உலகப் போற்றும்.

பொருளீட்டற் திறமைமட்டும் பயன்நல் காது
பெற்றபொருள் செலவிடுமத் தகைமை வேண்டும்;
பெருந்தொகையைத் தந்துசில மனைகள் வாங்கிப்
பழுதகற்றிப் பயன்படுத்த மிகுபண மாமென்(று)
உருவுசிதை யாதனைக் காப்ப தற்கும்
ஒருதொகையைச் செலவிட்டு விற்ற போது
வருந்தொகையின் கணக்கிழப்பு ஆயிரங் களென்றால்
வாழவைக்கும் அரசாமோ வாழு மோதான்!

சுற்றத்தார், தமைநச்சிப் பிழைப்போர் தம்மைச்
செழிப்பாக நடமாட வாய்ப்புத் தந்து
பெற்றிருக்கும் துணையென்றும் பிழைத்தி டாது
பெருந்தன்மைக் கிழுக்காகும் பழியே சேரும்;
ஒற்றாடல் வாய்மைவழி நடந்து போற்றல்
ஒழிவின்றிக் காப்பமைத்தல் உறுகண் ணோட்டம்
மற்றெவர்க்கும் மடங்காத ஆண்மை வேண்டும்
மாசுடைய வினைக்குழைத்தல் பெருந்தீங் காகும்.

தேர்தலிலே சென்றமுறை வெற்றிக் காகத்
தனக்குழைத்த ஒருதகுதி மனத்திற் கொண்டும்
தேர்தலிலே எத்தனைபேர் இவர்வாய்ச் சொற்குத்
தட்டாமல் சொன்னபடி வாக்கு நல்கி
நேர்நிற்போர் தோற்றிடவும் மீண்டும் வெல்ல
நிறைவாய்ப்புச் சேர்த்திடுவார் எனவும் எண்ணி
ஓர்தலின்றிப் பாராட்டி உதவும் கீழ்மை
ஒழுக்கமல்ல அரசியற்கும் நேர்மை அல்ல.

பகைநுழையாக் காப்பமைத்தல் கடமை; மெல்லப்
பகைநுழைந்து பலகற்கள் பரப்பைப் பற்றி
வகையாக இருப்பமைத்து உரிமை கொண்டும்
வாய்வீச்சில் நாட்கழித்தல் முறைமை யாமோ?

—தொடர்ச்சி 10-ம் பக்கம்—



சுழல் விளக்கு

ரகுநாதன்

அன்புடைய தோழரே !

வணக்கம். தங்கள் அஞ்சல்பார்த்து மிகவும் மகிழ்ந்தேன். தாங்கள் குறிப்பிட்டிருந்தபடி 'ரிஷிப்பிண்டத்தை'ப் பற்றி எழுதத் தேவையில்லை. 'ரிஷிப்பிண்டம் இராத்தங்காது' என்ற வழக்கை மெய்யாக்கவென்றே அரைகுறையான பிண்டம் ஒன்று பிறந்து, பிரகாசமான வெளிச்சத்தில் ஊருலகம் காண பாதையோரமாய் கிடக்கக் கண்டேன். என்னுடைய வியப்பெல்லாம் தாங்கள் முன்கூட்டியே சொன்னது எவ்வளவு மெய்யாய் நடக்கிறது என்பதுதான்.

அந்த குறைப்பிரசவம் 'குழல்' ஆராய்ச்சியுடன் தன் வருகையை ஊருக்கு உரக்கக் கூவக்கேட்டேன். 'குழல்' என்றவுடன், ஆராய்ச்சி கூந்தலில் சென்று முடியக் கண்டேன். அதைக்கூடக் கூறவே கூசுவதுபோன்று நாணிக்கோணி, வளைந்து நெளிந்து, அபிநய மொழியில் 'பாவம்' பிடிக்கக் கண்டேன்; அபிநய சுந்தரிகளின் வழி வழி வந்தோர், அப்படித்தான் அபிநய மொழியில் பேசுவார்கள் என்று சமாதானமும் செய்துகொண்டேன். ஆனல் நண்பரே, நீங்கள், 'சுழல் விளக்கு'என்ற ஒன்று இருக்கிறதா ? என்று கேட்பீர்கள் என்பதும் எனக்குத் தெரியும்.

சுழல்கின்ற விளக்கை நான் கண்டதில்லை.

"ஏடா, மூடா! சுழல்விளக்கு என்றுல் உன்னைப் போன்றவர்களுக்கு தெரியாது என்றுதானே. படம்போட்டுக் காட்டியிருக்கிருர்கள், கனலும் புனலும் கலந்த கடுந்தமிழ் வீரர்கள் !" என்று நீங்கள் காயக் கூடும். அவர்கள் போட்டு காட்டியிருக்கிற படம் **கலங்கரை விளக்கு**; சுழல் விளக்கல்ல ! நீங்கள் வியக்கக் கூடும்; விவரம் என்னவென்ருல், விளக்கு சுழல்வதில்லை என்பதுதான் நான் தரக்கூடிய விளக்கம்.

தாங்கள் முன்போர் முறை என்னேடு **கோடிக்கரை** என்ற பண்டையப் புகழ்பெற்ற, இன்றைய பாழ்பட்ட சிற்றூருக்கு வந்தது நினைவிருக்கலாம். அங்கே இடிந்து போய், நசிந்த நிலையிலிருக்கும் ஒரு உயர்ந்த கம்பத்தைக் காட்டி, "இதுதான் கடல்வழிப் பயணம் போவோருக்கு திசைகாட்டும் கலங்கரை விளக்கு" என்று அவ்வூர் பெரியவர் ஒருவர் சொன்னதும் நினைவிருக்கலாம்.

அலை கடல் கிழித்து, பல கலம் செலுத்தி, நம் முன்னேர்-தமிழ் மறவர்கள் அயல்நாடுகளுடன் வாணிபத் தொடர்பு கொண்டிருந்த காலத்தில், கலங்கள் கரைவந்து சேரவும், கடலில் இருக்கும் கற்பாறைகளில் மொத்துண்டு சிதருமல் இருக்கவும் வழியெல்லாம் ஒளி பாய்ச்சும் சுடரொளி அதன் உச்சியில் ஓயாமல் ஒளிர்ந்துகொண்டே இருக்குமாம். அந்தக் கம்பத்தின் முகடு ஆழமாய் அகழப்பட்டிருக்கும்; அதில் குடங்குடமாய் எண்ணெய் ஊற்றப்பட்டு, திரி ஏற்றி வைக்கப்பட்டிருக்குமாம். வான்வழியில், உடுக்களின் துணைக்கொண்டு திசைகாணும் மாலுமிகள், இத்தகைய கலங்கரை விளக்குகள் காட்டும் ஒளிவழியைத் துணை கொண்டே கரை காணுவார்களாம்.

"அது அந்தக்கால கலங்கரை விளக்கு; இந்தக்கால 'லைட்ஹவுஸ்' சுழன்று, சுழன்று ஒளி பாய்ச்சுகிறதே" என்று சில அரைகுறைகள் ஐயப்படலாம். இந்தக் கால கலங்கரை விளக்குகள் கூட சுழல்வதில்லை. ஆமாம் தோழரே ! விளக்கு சுழலுவதில்லை.

கலங்கரை விளக்கு பொறுத்தப்பட்ட விதத்தில், பொறுத்தப்பட்ட நிலையிலிருந்து இம்மியும் சுழலுவதில்லை. அதைச்சுற்றிலும், ஒளியைப் பன்மடங்கு பெருக்கிக்காட்ட வல்ல அணைப்புக்கண்ணுடியும் சுழலுவதில்லை. இரண்டிற்குமிடையே—அதாவது, விளக்கிற்கும்,அணைப்புக் கண்ணுடிக்குமிடையே ஒரு தகடு பொறுத்தப்பட்டிருக்கிறது. அதன் அமைப்பில் நேர் எதிராக இரண்டு இடைவெளிகள் உள்ளன. மீதமுள்ள பகுதிகள் கருப்பு மைப் பூச்சுடன் திகழ்கிறது. அந்தத் தகடுதான் சுழல்கிறது. அதன் கருப்புப் பகுதிகள் ஒளியை அடக்கியும், இடைவெளிகளின் வழியாக விளக்கொளி வெளியே தெரியவுமான ஏற்பாட்டில் அந்தத் தகடு சுழல்கிறது. இதுதான் உண்மையே தவிர, விளக்கே சுழல்வதாக நினைத்துக்கொண்டு, பட்டணத்துச் சீமையில் சுழல்விளக்கு போடுபவர்கள் பொய்விளக்கைத் தான் சுழல விட்டிருக்கிருர்கள்; அல்லது அவர்களுக்கு தெரிந்ததே அவ்வளவுதான் என்று நினைக்க வேண்டியதாய் இருக்கிறது.

உலகம் சுழல்கிறது; வான்கதிர் சுழல்கிறது; நதிநீர் சுழல்கிறது; கடலில் சுழற்சிகள் உண்டு; **போதையேறியவனுக்கு மட்டுந்தான் எல்லாமே சுழலும்—கலங்கரை விளக்கு உட்பட !**

நிற்க; "கடல் கிழக்கு-கரைபொருவெள்ளாறு ...." என்று துவங்கும் பாடலைப் பற்றி, நாளும் வெளிவரும் ஏடொன்று எழுதி இருப்பதை நீங்கள் கண்டிருக்கலாம். "இதோ, பன்மொழிப் புலவர் பதில் சொல்கிருர்" என்று, திரு. அப்பாத்துரையாரைபதில்சொல்லவைத்திருக்கிறது அந்த ஏடு. திரு. அப்பாத்துரையார் அப்படி வாரி வழங்கிய ஆதாரம் என்னவென்று பார்த்தால், அந்த ஏடு 'முயலுக்கு மூன்று கால்' என்று சொன்னதையேதான்சொல்லி இருக்கிருர்; அல்லது, சொன்னதாக சொல்லப்பட்டிருக்கிறது.

பாசமும், நேசமும் குழையக் குழைய 'பன்மொழிப் புலவர்' என்ற பட்டத்தோடு கோடிட்டுக் காட்டப் பட்டிருக்கும் திரு. அப்பாத்துரையாருக்கும், அந்த ஏடு நடாத்துவோருக்கும் இடையே நிலவிய உறவு முறை ஒன்று என் நினைவுக்கு வருகிறது. நீங்கள் எழுதி இருந்தபடி பழைய நினைவுதான்.

ஓரிரண்டு ஆண்டுகளுக்கு முன்பு. சென்னை, ராஜாஜி ஹாலில் தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தலைவரான திரு. அப்பாத்துரையார், தன் தலைமை உரையில் குறிப்பிடத் **தகுந்த** எழுத்தாளர்கள் பெயரையெல்லாம் குறிப்பிட்டிருந்தார். அவர் ஒரு பெயரை சொல்லவில்லையாம்; அந்தப் பெயருக்குரியவர் ஒரு எழுத்தாளர்தான் என்று 'ங்கொபபராணை' யாகக் கொக்கரித்தது அநத எடு. அந்த மகத்தான எழுத்தாளர் சினிமாவுக்கு வசனமும், சில மேலைநாட்டுபுத்தகங்களை 'தமிழில், தன்னுடையது போல் எழுதியதன்றி தன் சொந்தச் சரக்காக எழுதியவை என்ன என்பது எனக்கு இன்னமும் தெரியவில்லை. அப்படி'சொந்தமாக' எழுதிய ஒன்றிரண்டிலும், 'கதை அம்சத்தைவிட பிரச்சார அம்சம் தான் அதிகமாகக் காணக் கிடைக்கிறது' என்று விமரிசனம் செய்த ஒரு ஆசிரிய-எழுத்தாளரை, அந்த ஏடு குதறி எடுத்தது. அது ஒருபுறமிருக்கட்டும். விடுபட்டுப் போன அந்தப் பெயர், ஒரு எழுத்தாளருடையது என்று **எடுத்துக் காட்டியதுடன்** நின்றதா அந்த ஏடு ! அதுதான் கிடையாது. அந்தத் திருப்பெயரை சொல்லாமற் போனது "மன்னிக்க முடியாத குற்றம்" என்று தலையங்கமும் தீட்டியது. அந்தத் தலையங்கத்தில் சிந்திக்கிடந்த சில கருத்து மணிகளை, இன்று நினைத்தாலும் சிரிப்பு வருகிறது.

"அந்தத் திருவாயால் தன் பெயர் உச்சரிக்கப்படுமா என்று காத்துக் கிடப்போர் ஆயிரம் ! ஆயிரம் !" என்று, சினிமா வசன 'ஸ்டைலில்' அந்தத் தலையங்கம் நீண்டு நெளிந்து, திரு. அப்பாத்துரையார் மீது நச்சுமழை பொழிந்தது. ஏடும் எழுதுகோலும் செய்த பாவத்தால், எழுதத் துவங்கிவிட்டவர்கள் கையில் ஒரு நாளிதழும், சிக்கிவிட்டால் நல்ல கருத்துக்களையா எதிர்பார்க்க முடியும் ?

அத்த தலையங்கத்தை தமிழகமும், தமிழறிந்தோரும் தாங்கிக் கொள்கிருர்களே ! ஒரு பெயரை இழிவுபடுத்தும் வகையில் சொல்லுவது வேண்டுமானுல் குற்றமாகலாம்; வேண்டுமென்றே பெயரைக் குறிப்பிட்டுக் கேவலமாக (சென்ற கடிதத்தில் நீங்கள் முத்துராமலிங்கத் தேவர் மதுரையில் பேசியதாகக் குறிப்பிட்டிருந்தீர்களே, அதைப் போல) பேசியிருந்தால் அது மன்னிக்கமுடியாத குற்றமாகலாம்; ஆனல், ஒரு பெயரை சொல்லாமற் போனதே குற்றம் என்ருல் இதை என்னவென்பது? பிள்ளையார் சுழி போடாமல் கணக்கெழுதும் கணக்குப்பிள்ளையை மன்னித்துவிடும் 'பக்தி வெறியர்களை'க்கூட நான் கண்டிருக்கிறேன்; இப்படியொரு பகுத்தறிவுவாதி (!) வர்ணாஸ்ரம தர்மத்தை வலியுறுத்தி, தமிழ்ப் புலவரை — பன்மொழிப் புலவரை வசைபாடியதைக் கண்டு நான் உள்ளபடியே திடுக்கிட்டுத்தான் போனேன்.

நான், அந்த ஏட்டைப் படித்துக் கொண்டிருந்தபோது, என்னேடு இரண்டொரு கல்லூரி மாணவர்களும் நின்றுகொண்டிருந்தனர்.

நான் கேட்டேன்: "ஆயிரம் பெயர்களால்(சஹஸ்ரநாமங்களால்) அர்ச்சிக்கப்பட வேண்டிய ஆண்டவன், அர்ச்சகர் ஒரு பெயரை உச்சரிக்காமல் விட்டுவிட்டார் என்று கோபித்து கொண்டதாகக் கேள்விப் பட்டதுண்டா?"

ஒரு கல்லூரி மாணவர்சொன்னுர், "கிராம எல்லையில்கோயில்கொண்ட **காட்டுத் தேவதை**, இந்த மாதிரி 'குத்த'ங்களைக் கூட பொறுத்துக் கொள்ளாமல் கோபித்துக் கொள்வாள் கொள்ளை நோய்களை ஊரார் மீது ஏவுவாள் என்று கருவேப்பிலையும் கையுமாய் திரியும், **கள் வெறியேறிய பூசாரி** எத்துப் பேச்சுப் பேசி, பாமரமக்களை ஏய்த்து, காசும்,கிடாவும், கோழியும் கள்ளும் காணிக்கையாகப் பறிப்பான். ஏதுமறியாத அந்த ஏமாளிகளும் அந்த **ஏய்ப்பனை** நம்பி, நடுநடுங்கியபடி காணிக்கை செலுத்தி காலில் விழுவார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதுகூட இப்பொழுதல்ல; முன்பு-நெடுநாட்களுக்கு முன்பு!"

அந்த உரையாடல் இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது. திரு. அப்பாத்துரையாரின் அறிக்கையொன்று மறுநாள் 'தனி அரசு' ஏட்டில் வெளிவந்தது. அந்த நண்பர்களிடம் ஓடோடியும் சென்று, "நெற்றிக்கண்ணைத் திறந்து காட்டினுலும், குற்றம் "குற்றமே !" என்று குரலுயர்த்திய நக்கீரன் பரம்பரையல்லவா பன்மொழிப் புலவர் ! பாரும்பதிலை! படிக்கிறேன்கேளும்!" என்று பத்திரிகையை விரித்து படிக்கத் துவங்கினேன்; எப்படிச் சொல்வேன் என் ஏமாற்றத்தை !

"அந்தத் திருப்பெயரை பஜிக்கும் பக்தனல்லவா நான் ! இனி ஏறுகின்றபோதெல்லாம் அந்தத் திருநாமத்தை முழக்குகிறேன். என் அறிவுக்கண்களை அகலத் திறந்த ஐயனே ! மெய்யனே ! இப்பிழை பொறுத்தருள்வீர் ! இம்முறை பொறுத்தருள்வீர் !" என்கின்ற விதமாக அந்த பதில் அறிக்கை இருந்தது. தமிழன் நெஞ்சுரத்தைப் பற்றியும், தமிழ்ப் புலவர்களின் திண்மையைப் பற்றியும், நக்கீரனைப் பற்றிய அந்தக் கர்ண பரம்பரைக் கதையைப் பற்றியும் நான் கொண்டிருந்த பெருமையும், அவற்றின்

—தொடர்ச்சி 8 ம் பக்கம்—

தாய் மொழி காப்பீர்

கி. ஆ. பெ. விசுவநாதம்

பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்கள் ஒன்றுகூடி, இந்தியாவிலுள்ள எல்லா மொழிகளையும் இந்தி எழுத்துக்களிலேயே எழுதுவது என்று முடிவுசெய்திருக்கிறார்களாம். இச்செய்தி முன்பு நாளிதழ்களில் வெளிவந்தது. அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் இது வெறும் ஆலோசனை என்றார்கள். இப்போது அது காங்கிரஸ் தேர்தல் அறிக்கையிற் காணப்படுகிறது. இதுபற்றிக் கூற வேண்டுமானால், தமிழகத்தை நோக்கி ஒரு "பேரழிவு" வந்து கொண்டிருக்கிறது என்றே கூறவேண்டியிருக்கும்.

உரிமை

இம்மாநாட்டிற்குச் சென்றுவந்த நமது மாநில முதல் அமைச்சர் இம்முடிவைப்பற்றி இன்றுவரை எதுவும் கூறவில்லை. இதை அவர் ஏற்றுக்கொண்டு வந்தாரா? அல்லது மறுத்துவிட்டு வந்தாரா? என்பது தெரிந்தாகவேண்டும். அதையும் அவர் விரைவில் வெளிப்படையாகக் கூறியாகவேண்டும். இவ்வாறு கட்டளையிட தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு.

வேற்றுமைக்கு வித்து

ஒரு நாட்டின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள மக்கள் ஒன்று சேர மறுப்பார்களானால், அதற்குரிய காரணங்களும் பல்வேறாகவே இருக்கும். அவற்றை ஆராய்வதைவிட்டு அவை அனைத்திற்குங் காரணம் அவர்களது மொழிகளுக்குத் தனித்தனியான எழுத்துக்கள் இருப்பதுதான் என எண்ணுவது உண்மைக்கு மாறானது. அவர்களது மொழிகளையெல்லாம் ஒரே எழுத்தில் எழுதவைப்பது தான் அவர்களை ஒற்றுமைப்படுத்தும் வழி எனக் கருதுவது நகைப்புக்கு இடமானது. கூறவேண்டுமானால் அதை வேற்றுமைக்கு வித்திடும் வழி என்றே கூறியாகவேண்டும்.

முழு நிறைவு

ஒவ்வொரு மொழிக்கும் ஒவ்வோர் எழுத்தும், எழுத்திற்கோர் ஒலியுமிருந்து அவ்வம் மொழியைச் சிறப்பித்து வருகின்றன. ஓர் இன மொழியின் எழுத்தைக்கொண்டு மற்றோர் இன மொழியை எழுதும்படி வற்புறுத்துவது கொடுமையாகும். அவ்வாறு எழுதுவதானாலும் அதன் ஒலியும் மாறுபட்டு, மொழியும் சிதைவுபட்டுப் போய்விடும். இக்கருத்தில் மற்ற மொழிகளைப்பற்றி சிறிது மாறுபாடுகள் தோன்றினாலும் தமிழைப் பொறுத்த வரையில் இது நூற்றுக்குநூறு உண்மையாகும்.

தமிழ்மொழியின் எழுத்துக்களும், அதன் ஒலிகளும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியவை; முழு நிறைவுபெற்றவை. மிக அண்மையில் தோன்றிய இந்தியை எழுதுவதற்குப் பயன்படுகின்ற தேவநாகரி எழுத்துக்கள் முழு நிறைவு பெறாதவை. அதன் குறைபாடுகள் நீக்கவும் முடியாதவை. இக் குறையைக்கொண்டு நிறைவை எழுதவும், ஒலிக்கவும் முடியாது

இயல்

இந்தி எழுத்துக்களில் "எ", "ஒ" குறில்கள் இல்லை. அவற்றிற்கெல்லாம் "ஏ", "ஓ" நெடில்களையே பயன்படுத்தியாக வேண்டும். அவ்வாறு பயன்படுத்தித்தான் "பொன்மலை"யைப் "போன்மலை" என்றும், "பொறையாறு" என்பதைப் "போறையாறு" என்றும் எழுதியிருக்கிறார்கள். இந்தி எழுத்துக்களைக் கொண்டு "ஒடு, ஒடி, ஒட்ட, ஒட்டு, ஒட்டை, ஒத்து" என எழுத இயலாது. அவற்றை "ஓடு, ஓடி, ஓட்ட, ஓட்டு, ஓட்டை, ஓத்து" என்றுதான் எழுத முடியும்.

"பொடி, பொட்டு, பொதி, பொது, பொய், பொத்தல்" என்பவைகளை இந்தி எழுத்துக்களில் எழுதினால், அவற்றை "போடி, போட்டு, போதி, போது, போய், போத்தல்" என்றுதான் படிக்க வேண்டிவரும்.

"செல், வெல், மெல், கெடு, பெண், எங்கு" என்பவைகளை இந்தி எழுத்துக்களைக்கொண்டு எழுத முடியாது. எழுதினால் "சேல், வேல், மேல், கேடு, பேண், ஏங்கு" என்றே இருக்கும்.

"கொடி, கொடு, கொதி, கொடை, கொட்டு, கொட்டை" என்று எழுதினால், அவை "கோடி, கோடு, கோதி, கோடை, கோட்டு, கோட்டை" என்றே காட்சியளிக்கும்

"தொகை, தொலை, தொடி, தொடு, தொட்டி, தொண்டு" என இந்தி எழுத்துக்களில் எழுதப்பெற்றிருக்குமானால், அதைப் படிப்பவர்கள் "தோகை, தோலை, தோடி, தோடு, தோட்டி, தோண்டு" என்றே படித்தாகவேண்டும். எழுத்து குறிலும், நெடிலும்தான் என்றாலும், பொருளில் பெரும் வேற்றுமை காணப்படும். "அரிசி நோய்" என்று இந்தியில் எழுதினால் அதன் பொருள் எங்குபோய் நிற்கும்?

தமிழ்மொழியை இந்தி லிபியில் எழுதத் தொடங்கினால், ஒ, கொ, ஙொ, சொ, ... னொ என்கிற 19 எழுத்துக்களும், எ, கெ, ஙெ, செ, ... னெ என்கிற 19 எழுத்துக்களும். அவ்வெழுத்துக்களைத் தலைப்பிற்கொண்ட ஏறத்தாழ 8700 தமிழ்ச் சொற்களும் அன்றே இறந்துபட்டுப் போய்விடும்.

இசை

தமிழ் இசைக்கும் தாளத்திற்கும் ஏற்ப இந்தி எழுத்துக்களில் தமிழ்ப்பாடல்களை எழுத இயலாது. எழுதினால், பாட்டிற்கும், பண்ணுக்கும் இடையில் ஒரு பாலம் அமைக்க வேண்டிவரும். தமிழ் எழுத்தையும், இந்தி லிபியையும் ஒலிப்பதில் ஓசையின் மாத்திரை அளவு கூடியும் குறைந்தும் வருவதால், அது தமிழ் இசையின் பண்பையே கொலைசெய்துவிடும்.

இக் கொலை எப்படி இருக்கும் என்பதை அறியவேண்டுமானால், அருணகிரிநாதர் திருப்புகழ் ஒன்றை இந்தி லிபியில் எழுதும்படிச் செய்து அதை ஒரு குசராத்தி அல்லது மார்வாடியிடம் கொடுத்து பாடச்சொல்லிக் கேட்பதன் மூலம் நன்கறியலாம். பாடத் தொடங்கும்பொழுதே தமிழும் அதன் இசையும், தாளமும் அதன் கட்டும், பண்ணும் அதன் இனிமையும், பாடலும் அதன் நயமும் பாழ்பட்டுப்போவதைக் காணலாம். அதனால், "தமிழ் இசைக்கு இந்தி எழுத்து இசையாது" என்பதும் புலனாகும்.

நாடகம்

ஒரு நாடகத்திற்கு உயிரளிப்பது அதன் உரையாடல்(வசனம்). தமிழ் உரையாடலை இந்தி எழுத்துக்களில் அமைக்க வராது. அதற்குப் பொருட்டுகள் நான்கு :

(1) "எ" "ஒ" குறில்கள் இல்லை. (2("ள" ஒலியில்லை. (3) "ழ" எழுத்து இலலை. (4) ய், ர், ல், வ், ம், ஒற்றெழுத்துக்கள் கிடையாது என்பதே. தமிழ் எழுத்துக்குள்ள தனிச் சிறப்பு "ழ" கரத்தால் அமைந்தது. தமிழ் ஒலிக்குள்ள தனிச் சிறப்பு அதன் "ள", "ல", "ழ" ஒலிச் சிறப்புக்களால் அமைந்தது. இந்த நான்குமில்லாத ஒரு லிபியைக்கொண்டு தமிழ் உரை நடையை எழுதவோ, சொல்லவோ முடியுமா என்பது எண்ணிப்பார்க்கவேண்டிய ஒன்று. எண்ணிப்பார்த்து அறியமுடியாதவர்கள் படித்துப் பார்த்தாவது உணரலாம் அல்லவா? படியுங்கள் :

"அருள்மொழியே, ஆசைக்கிளியே, என்னுள்ளத்தைப் பாழாக்கிக் கொலை செய்துவிடாதே" என்ற உரையாடலை இந்தி லிபியில் எழுதினால், "அருல மோலியே, ஆசைக் கிலியே, என்னுல்லத்தைப் பாலாக்கிக் கோலை சேய்துவிடாதே" என்றுதான் இருக்கும். எப்படி இந்த வசனம்? இது பெரும் விசனம். விரிவு எதற்கு? அதனால் "தமிழ் மொழி" என்றுகூட எழுதவராது. "தமில மோலி" என்றே அது எழுதும் : "தமில மோலி" என்றே அது ஒலிக்கும்.

முடிவு

"எழுத்திலக்கணம், சொல்லிலக்கணங்களைப் பெற்று மூவாயிரம் ஆண்டுகளாகச் சிறந்து விளங்கி வந்த "தொல்காப்பியம்" இந்த நூற்றாண்டில் அழிந்து ஒழிந்து போயிற்று" என்று நமக்குப் பின்னே தோன்றுகிற வரலாற்றுக்காரர்கள் எழுதுவார்கள் என்றுதானே எதிர்பார்க்கிறீர்கள்? அப்படிக்கூட இராது. அவர்கள் எழுதும் வரலாறு, "ஏலுத்திலக்கணம், சோல்லிலக்கணங்களைப் போற்று மூவாயிரம் ஆண்டுகளாகச் சிறந்து விலங்கிவந்த "தோல்காப்பியம்" இந்த நூற்றாண்டில் அலிந்து ஓலிந்து போயிற்று" என்றே இருக்கும்.

"ஒரு மக்களின் நாகரிகத்தை அழிக்கவேண்டுமானால், அவர்களின் மொழியை அழி. ஒரு மொழியை ஒழிக்கவேண்டுமானால், அதன் எழுத்தை ஒழி" என்பது ஒரு அழிவழக்கு. அது இன்று நம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. தமிழனுக்கு இன்று மீதியாக இருப்பதெல்லாம் அவனது தாய்மொழி ஒன்றுதான்! அதற்குமா இந்த அழிவு?

"பட்டத்திற்கும், பதவிக்கும், பொருளுக்கும், புகழுக்கும், ஆசைப்பட்டு அலைகின்ற அரசியல் கட்சியினர்க்கு மொழி உணர்ச்சி என்றைக்கு வரும்?" என்று ஏங்கிய காலம் ஒன்று உண்டு. இன்று அவர்களனைவரும் தந்நலத்தைத் துறந்து தமிழ் நலங்காக்க ஒன்றுபட்டுப் போராடுங் காலம் வந்துவிட்டது.

தமிழ் மக்கள் விழித்தாகவேண்டும். தமிழகம் திரண்டாக வேண்டும். தமிழ்மொழி வாழ்ந்தாகவேண்டும்.

வாழ்க தமிழ்மொழி.

ஐயம் அகற்று!

-"ராஜு"-

(திருவாளர் **லினன் துண்டு** அவர்களை, தோழர் **ஐயம்** சந்தித்து உரையாடியபோது, உடனிருந்து கேட்ட நமது நிருபர் தரும் செய்தி.)

திரு. லி : எங்கள் தலைவரின் பெருமைகள் தெரியுமா உனக்கு?

தோழர் ஐ : சொல்லுங்கள்;கேட்கிறேன்!

திரு லி : அவருக்கு குலப் பெருமை கிடையாது!

தோழர் ஐ : குலப்பெருமை என்றால் என்ன?

திரு லி : அதாவது ஒழுக்கம் தரும் விழுப்பமும், விழுமிய நெறிகளையுமுடைய குடும்பம் குலப்பெருமையுடையது ; எங்கள் தலைவரின் பெருமையே அது இல்லாததுதான்.

தோழர் ஐ : அப்படியா.......! அடுத்த பெருமை என்ன?

திரு லி : அவர் சாமான்யர்!

தோழர் ஐ : சாமான்யர் என்றால் என்ன பொருள்?

திரு லி : எளிமையானவர்; ஏது மற்றவர்; ஏழை பங்காளர்!

தோழர் ஐ: உங்கள் தலைவர் ஏது மற்றவரா?

திரு லி: ஏதோ சென்னையில்ஒரேயொரு பங்களா; நகருக்கு நாற்பது கல் தொலைவில் இரண்டேயிரண்டு மாடி வீடுகள்; அவ்வளவுதான்.

தோழர் ஐ : கார்-கீர் ஏதாவது....?

திரு லி: ஆமாம்; ஒரேயொரு கார்!

தோழர் ஐ: வேறு சொத்து சுகங்கள்....?

திரு லி: ஆங்கில வார ஏடொன்று; தமிழ் வார இதழ் ஒன்று; சொந்த அச்சுக் கூடம் அவ்வளவுதான்!

தோழர் ஐ : வேறு வருமானம்?

திரு லி : பொதுக் கூட்டங்களுக்குப்போவார். பெட்ரோல் செலவிற்கு ஐம்பதோ நூறோ கிடைக்கும்; கூட்டம் ஒன்றுக்கு. சினிமாவுக்கு கதை வசனம் எழுதுவார்; நாற்பதோ முப்பதோ கிடைக்கும் ஆயிரங்கள்தான். வேறெதுவும் கிடையாது. ஏடுகள் ஏதோகொஞ்சம்ஆதாயத்தில் ஓடுகின்றன. அதற்குநிதிகள் அடிக்கடி தருவார்கள்; அத்தோடு சரி.

தோழர் ஐ : ஐயோ பாவம்! மிகவும் சாமான்யர். நண்பர்களும் சாமான்யர்கள்தானு?

திரு லி : ஆமாம்; அவரைப் போலவே ரொம்பவும்சாமான்யர்கள்!

தோழர் ஐ : ஒன்றிரண்டு பேர்களை சொல்லமுடியுமா?

திரு லி : ஒரு பஸ் முதலாளி-சமீபத்தில் காலமாகி விட்டார். ஒரு லாரி 'ஓனர்'— அங்குதான் 'கைகள்' கூடும். அலட்சியமான நபர் ஒருவர்–சினிமாக் கம்பெனியில்கொஞ்சம் சம்பாதிப்பவர். ஒன்றிரண்டுவீடு, சிலவேலி நஞ்சை புஞ்சை, நான்கைந்து கார்கள் அவருக்கு. இன்னொரு நண்பரும் அப்படித்தான்; புரட்சிகரமானமனிதர் அவர். அவர் சொந்தத்தில் படமெடுப்பதுண்டு; தலைவர் மீது ரொம்பப்பற்றுதல்.

தோழர் ஐ : ச்சூ.... ச்சூ... எவ்வளவு எளியவர்! ஏழை பங்காளர், உண்மையில், அவர்லான் மிகவும் சாமான்யர் தான்!

★

திரு. லி : எங்கள்தலைவர் என்ன முழங்கினுர் தெரியுமா?

தோழர் ஐ : என்னமுழுங்கினுர்?

திரு. லி : முழுங்கவில்லை ஐயா! "முழங்கினுர்." "எங்களிடம் தங்களையே தியாகம் செய்து கொள்ளும் பொட்டி ஸ்ரீராமுலுவும் உண்டு; அசாம், அலகாபாத் நடத்திக் காட்ட வல்லவர்களும் உண்டு" என்று முழங்கினுர்.

தோழர். ஐ : புரியும்படி சொல்லுங்கள்!

திரு. லி : (சன்னக்குரலில்) அதாவது, 'எங்களிடம் பலி ஆடுகளும் உண்டு; கசாப்புக் கடைக்காரர்களும் உண்டு' என்று பொருள்.

தோழர். ஐ : அப்படியா.... எவ்வளவு நாகரிகமான-நளினமான நாக்கு; வாக்கு!

★

திரு. லி : எங்கள் தலைவர் தேடி அலையமாட்டார்; வந்தால் விடமாட்டார்!

தோழர் ஐ : எதைத் தேடி அலையமாட்டார்?

திரு. லி : போராட்டத்தை!

தோழர் ஐ : எதை வந்தால் விடமாட்டார்?

திரு. லி : சீட்டுக்கட்டு! இன்னும் சில!

★

திரு: லி : எங்கள் தலைவரைப் பார்த்து "நீ தமிழனு?" என்று யாரும் ஐயத்தோடு கேட்கமாட்டார்கள்!

தோழர் ஐ : ஆமாம்; அந்த ஐயம் யாருக்கும் வராது! அவர் திராவிடர் என்பது எல்லோருக்கும் தெரியும்.

திரு. லி : திராவிடர் என்பது நான்கு காலணு சேர்ந்த ஒரு அணு!

தோழர் ஐ : அப்படியே ஒப்புக் கொள்கிறேன்.

(தோழர் ஐ தன் வியப்பைதெரிவித்து விட்டு விடை பெற்றுர்)

★

"தமிழ்த் தேசிய மாணவர் மன்றம்"

அன்புடையீர்,

தமிழ்த் தேசிய உணர்வு கொண்ட மாணவர்களுக்கென ஒரு அமைப்பை உருவாக்க வேண்டி ஜூலைத் திங்கள் இறுதியில் அமைக்கப்பட்ட அமைப்புக் குழுவினருக்கு நாடெங்கிலும் உள்ள மாணவ தோழர்களிடம் நல்ல வரவேற்பு கிடைத்துள்ளது.

ஆங்காங்கே உள்ள மாணவ நண்பர்களை ஒருங்கு சேர்த்து முறையான அமைப்பினை உருவாக்க மாணவர் அமைப்புக்குழு விரும்புகிறது, எனவே, மாணவத் தோழர்கள் தங்கள் உயர்நிலைப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், தமிழ்த் தேசிய மாணவர் மன்றத்தின் கிளைகளை உருவாக்கி தமிழ்த் தேசிய மாணவர் மன்ற தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவேண்டுகிறேன். கிளைகளை அமைக்கின்ற தோழர்கள் கீழ்க்காணும் விதி முறைகளை மேற்கொள்ள வேண்டுகிறேன்.

1. ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கும் கல்லூரிக்கும் ஒரு கிளை உருவாக்க வேண்டும்.
2. ஒவ்வொரு கிளையும் குறைந்தது 10 உறுப்பினர்களைக் கொண்டதாகஇருக்கவேண்டும்.
3. கிளை, தன்னுடையதலைவர், செயலாளர், பொருளாளர், ஆகிய மூவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

. உறுப்பினர்களின் பெயர், வகுப்பு, முகவரி, கையொப்பம், ஆகிய விவரங்களை தெளிவாக எழுதி தலைமை அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும்.

அமைப்பு முறைகளைப்பற்றி அடியிற்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறேன்.

தோழமையுள்ள,
இ. கிருட்டிணன்

தலைவர்,
தமிழ்த் தேசிய மாணவர் மன்றம்
69, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-6

(முதற்பக்கத் தொடர்ச்சி)

இன்று, உலகத்தின் பாதிப் பகுதி ஜனநாயகத்திலிருந்து சர்வாதிகாரத்திற்கே திரும்பி விட்டது.

மீதி உலகமும் அந்த வழியே போய்க்கொண்டிருக்கிறது.

நமது தலைமுறையின் கடைசிக் கட்டத்தில், உலகம் முழுவதையும் சர்வாதிகாரம் கவ்விக்கொள்ளும்.

தவிர்க்கமுடியாத இந்த ஆபத்தை, நமது தலைமுறை எதிர்நோக்கியே தீரவேண்டும். பிறகு மீண்டும் எப்பொழுதாவது ஜனநாயகம் அரும்பலாம். ஆனுல் நம்முடைய தலைமுறையில் இல்லை.

★

5-ம் பக்கத் தொடர்ச்சி ————

பால் நான் வைத்திருந்த நம்பிக்கையும் பொடிப்பொடியாய் போனது அந்த "வீர" அறிக்கையைக்கண்ட அன்றுதான்.

ஆனல் அந்த அறிக்கையில் ஒரு உண்மை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. "வரலாற்றைப் பற்றியோ, சரித்திரத்தைப் பற்றியோ தனக்கு தோன்றும் ஐயங்களையெல்லாம், தொலைபேசிமூலம் கேட்டுத் தெரிந்து கொள்ளும் அந்தஏட்டின் ஆசிரியர், இதையும் கேட்டுத் தெரிந்து கொள்ளக்கூடாதா ?" என்று திரு. அப்பாத்துரையார் அங்கலாய்த்துக் கொண்டார்.

பாண்டியன் பரிசு என்ற பரிசல் ஏறி, ரோமாபுரி ராணிகளைத் தேடிக் கொண்டிருந்த நேரமது. அந்த ஏட்டின் ஆசிரியரும்,'பெரிய மனது' வைத்து "நடந்தது நடந்தவைகளாய் இருக்கட்டும்; இனி நடப்பவைகள் நம் ஆணைப்படியே நடக்கட்டும்" என்று பன்மொழிப் புலவருக்குப் பாவமன்னிப்பு அளித்தார்.

அன்று தொலைபேசிமூலம் ஐயங்களைத் தீர்த்து ஆதாரங்களை அளித்தவர், இன்று ஏட்டிலே எழுதியோ, நேரிலே பேசியோ இலக்கிய சர்ச்சைகளில் 'இண்டு இடுக்கில்' மாட்டிக்கொண்டு தவிக்கும் அந்த 'மன்னிக்கமுடியாத குற்றங்களை' கரை சேர்க்கிறர். திரு. அப்பாத்துரையார் விளக்கம் தந்து, அந்த விளக்கத்தின் காரணமாக நாம் தெளிவு பெறுவதில் நமக்கு கேவலமொன்றுமில்லை. ஆனல் சொத்தை வாதங்களுக்கு தன் வித்தையை விலை கூறினல் அவருக்குத்தான் கேவலம்; அவ்வளவுதான் நாம் இப்பொழுது சொல்ல விரும்புவது.

"என் வஜனத்தையா குறை கூறுகிருய் ?" என்று புலிவேஷம் போட்டிருப்பவர்களையும் நான் சுழல் விளக்கின் வெளிச்சத்தில் பார்த்தேன்.

தோழரே ! "தென்றலைத் தீண்டிய தில்லை" என்ற புகழ்(!) பெற்ற வரிகளை எழுதியது அந்தப் பேனதான். தென்றலை, கைகளால் தீண்டவோ, கண்களால் காணவோ முடியாது; புலன்களால் உணரமட்டுமே முடியும் என்றுதானே நாமும் இத்தனை நாட்களாக நம்பிக்கொண்டிருக்கிறேம். 'வஜனத்தில்' குறைகாண முடியாத வஜன மேதைகள் அப்படி நினைக்கவில்லை. உலகத்தில் உள்ள சீமான்கள் எல்லோரும் தென்றலைத் தீண்டி, இரும்புப்பெட்டிக்குள் பூட்டி வைத்திருப்பதுபோலவும், தன்னுடையஏழைக் கதாபாத்திரம்மட்டுமே அதைத் தீண்டமுடியாமல் திண்டாடுவதைப்போலவும் நினைத்துக் கொண்டு தீட்டிய 'வறுமை' அது யார் மறந்தாலும்,அந்தவஜனத்தைக் கேட்டு விலாநோக சிரித்த சில தமிழ்மக்கள் அதை இன்றும் மறக்கவில்லை. அது மட்டுமா ! இதோ, சில வஜனத்துளிகள்.

நிணச்சேறு !

பிணமலை !

ரத்த ஆறு ! ரத்தத் தடாகம் !

எலும்புகளை பிடுங்கித் தருகிறேன் !

நரம்பை அறுத்து பல்லை பிடுங்கி பூஜை செய்கிறேன் !

எப்படி இருக்கிறது தோழரே ! இதெல்லாம் என்ன சுடுகாட்டுச் சரக்கின் பட்டியலா என்று கேட்டு விடாதீர்கள் !

காட்டுமிராண்டித்தனத்தை "வீரம்" என்ற மேக்கப்பில் கொண்டுவந்து நிறுத்த அரிதாரம் பூசியோரின் கை வண்ணம்தான் அவைகள் அந்த வீர வசனம், அம்மாமி வசனமாக அடங்கி ஒடுங்கி தேய்ந்துபோய் ஒய்ந்துபோனதை அண்மையில் நான்கூடக் கேள்விப் பட்டேன்.

அது ஒருபுறமிருக்கட்டும் "நான் கழுதை என்று அழைத்திருந்தால், கழுதையாகி இருப்பாரா ?" என்று யாரோ நையாண்டி **மேளம்** முழங்கியதாகக் கேள்விப்பட்டேன். கழுதையைக் கடவுளாக்கிய ஒருவர் கதையை மட்டும் சொல்கிறேன்.

சென்னை, ஏழுகிணறு வட்டத்தில் பத்துப் பனிரெண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு இளமைதுடித்துக்கொண்டிருந்தது.

"பத்தாயிரம் ரூபாய்களையும், ஒரு கழுதையையும் என்னிடம் தாருங்கள். அந்தப் பணத்தைக் கொண்டு, அந்தக் கழுதையைக் கடவுளாக்கிக் காட்டுகிறேன்..."

அதற்குப் பிறகு அண்மையில், துடிப்பும் துள்ளலும் அடங்கிப் போய், துவண்டுபோன நிலையில் பொருள் காக்கும் பொறுப்பில் வீற்றிருந்த அதே மாஜி இளமை இப்படிக் கூவியது.

"அவரே எங்கள் **குலதெய்வம்**"

கையிலே பணப்பெட்டி, பத்தாயிரத்துக்கும் மேலே பணப்புழக்கம். சொல்லிலே "**அவரே தெய்வம்**" என்ற பல்லவி.

எப்படி ? தோழரே ! காசைப் பெற்றுக்கொண்டு,கடவுளை ஆக்கிய அந்தக் கருணை வள்ளல்களால்தான் இன்று முச்சந்திகளெல்லாம் கோயில்கள் எழுந்திருக்கின்றன. உற்சவ நேரங்களில் ஊர்வலம் வரும் மூலவர்களெல்லாம் அந்த "மூ"வின் கருணை கடாட்சம்தான் என்று 'தல புராணம்' சொல்கிறது.

அடுத்து, தங்கள் மடலை ஆவலுடன் எதிர்பார்க்கும்.

சின்னன்.

வெள்ளை, வெட்டை முதலிய உஷ்ண வியாதிகளுக்கு

எங்கும் பிரசித்தி பெற்ற

இராஜாளி எண்ணை

எந்த மருந்திலும் தீராத நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மஞ்சள், ரத்தசீழ், வெள்ளை, நீரடைப்பு, நீர்க் கடுப்பு, நீர் எரிச்சல், நீர் எரிவு, நீரிழிவு, ஆண்குறி, நரம்புவலி, வீக்கம், சொரி, சிரங்கு, ஊறல், படை, கிரந்தி புண், கைகால் பிடிப்பு, தந்திசூலை, நாபிரணம், கெர்ப்பரணம், முதலிய மிகக் கொடியமேகவியாதிகளை மறுமுறை வராதபடி வேரற நீக்கக்கூடிய மருந்து.

(மூலிகைகளினல் தயாரிக்கப் பெற்றது)

நாள்பட்ட வியாதிக்கு நெ. 1. 4 அவுன்சு ரூ. 7-00
ஆரம்ப வியாதிக்கு நெ. 2. ,, ரூ. 5-00

—: தேவைக்கு எழுதவும் :—

இராஜாளி எண்ணை டிப்போ
அரிசிப்பாளையம். சேலம்-2.

முல்லை

அக்டோபர்

இதழில்

பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் படித்து மகிழ்ந்த
ஆட்டனத்தி ஆதிமந்தி
காவியத்திற்குப்பிறகு

கண்ணதாசன்
எழுதும்
ஈழமகள் கண்ணீர்
தொடர் காவியம்
ஆரம்பமாகிறது

தியாகனின்
மாவீரன்
நெப்போலியன்
தொடர்கிறது

அதிகப் பிரதி தேவைப்படும் விற்பனையாளர்கள்
உடனே எழுதுக !

★ ★ ★

வெளிவந்து விட்டன :
கண்ணதாசன்
கவிதைகள்
320 பக்கங்கள் **மலிவுப்பதிப்பு**
விலை ரூபாய் 1-50 தான்

★ ★ ★

பாவ மன்னிப்பு
(முழுப்பகுதியும் அடங்கிய தத்துவக் கட்டுரைகள்)
கண்ணதாசன்
விலை : 40 காசுகள்

விபரங்கட்கு, தென்றல் 2/127 மவுண்ட் ரோடு சென்னை-6.

வாங்கும் வரியும் செய்யும் செலவும்

சு. சோமசுந்தரம் பி. ஏ.

இந்தியத் துணைக்கண்டம் இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை முடித்துக்கொண்டு மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தினை மிகப் பெரிய அளவுக்குத் தீட்டி செயற்படுத்த இருக்கின்றது. எந்த அரசும் மக்களின் நல்வாழ்வைக்குறிக்கோளாகக் கொண்டு திட்டங்கள் தீட்டி நிறைவேற்ற மக்களிடம் இருந்து பல வழிகளிலும் பணம் திரட்டுவது இயற்கையாகும். கொடுக்கின்ற பணம் நல்ல முறையில் திட்டங்களுக்காகச் செலவிடப்படும் என்ற நம்பிக்கையில்தான் மக்கள் தங்களை வருத்திக்கொண்டாவது பணத்தினை தருகின்ருர்கள். அந்தப் பணம் சரியான முறையில் பயன்படுத்தப்படுகின்றதா என்று அறிந்துகொள்ள முயல்வதில் வியப்பில்லை.

திட்டங்களுக்குத் தேவைப்படுகின்ற தொகையினை அரசாங்கம் பலவகைகளிலும் திரட்டுகின்றது. வரிவிதிப்பின் மூலமும், அரசாங்கக் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்ற ‘பிராவிடண்ட் நிதி’போன்ற நிதிகள் மூலமும், பொதுமக்கள் இடத்தில் கடன் எழுப்புதல், சிறு சேமிப்புத் திட்டம், வெளிநாடுகளில் இருந்து கிடைக்கின்ற உதவி இவைகள் மூலமும், ‘பற்ருக்குறை’க் கொள்கையினை கடைபிடிப்பதின் மூலமும், அரசாங்கம் திட்டத்திற்கான பெருந்தொகையினைத் திரட்டுகின்றது. வரிவிதிப்பின்மூலம் கிடைக்கின்ற தொகை குறிப்பிட்ட சதவிகிதத்தைப் பெற்றிருக்கின்றது என்பதை யாவரும் மறுக்க இயலாது. வரிவிதிப்பின்மூலம் வருவாய் தேடுதல் என்பது எந்த அரசாங்கத்திற்கும் இன்றியமையாத ஒன்ருகும். ஆனல் வரிவிதிக்கின்ற நேரத்தில் சில முக்கியமான விதிகளை அரசாங்கம் கடைபிடித்தாக வேண்டும். விதிக்கப்படுகின்ற வரி பொதுமக்களால் சுலபத்தில் கொடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும். புதிய வரிகளை தாங்கமுடியாத அளவுக்கு மேலும் மேலும் சுமத்திக்கொண்டிருத்தால், எதிர்கால வளமான வாழ்வை எண்ணி இப்பொழுது ‘தியாகம்’ என்ற பெயரில் அவற்றை நீண்ட நாளைக்கு அவர்களால் தாங்க முடியாது. மேலும், விதிக்கப்படுகின்ற வரி கொடுக்க இயலாத ஏழை மக்களை இறுதியாக பாதிக்காமல் இருக்கும்படி பார்த்துக்கொள்வது அரசாங்கத்தின் கடமையாகும். அதிக வரிவிதிப்பின்மூலம் மக்களின் ‘சேமிப்புச் சக்தி’ குறைந்து விடாமலும் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களிலும் வரிவிதிப்பின்மூலம் ஏராளமான தொகையினை அரசாங்கம் திரட்டியிருக்கின்றது. தாங்கமுடியாத வரிச்சுமை என்ற கண்டனம் எழுந்த நேரத்தில், ‘ஒத்துக்கொள்கிருேம்; எதிர்காலத்தை எண்ணி தியாகம் செய்தாக வேண்டும்’ என்று விளக்கமும் ஆறுதலும் தரப்பட்டது. எந்த நாட்டு அரசும் இதுவரை விதிக்காத நூதன வரிகளை எல்லாம் நமது அரசாங்கம் விதித்தது. இப்படி அதிகப்படியான வரிவிதிப்பின்மூலம் திரட்டப்படுகின்ற தொகை சரியான முறையில் திட்டங்களுக்காகச் செலவிடப்பட்டுள்ளதா என்ருல் இல்லை என்றுதான் நம்மால் கூற முடிகின்றது.

பொதுத்துறையில் முதலீடு செய்யப்பட்ட தொகை ஆண்டுதோறும் உயர்ந்துகொண்டு வந்திருப்பதை நாம் காணமுடியும். 1951-’53-ல் 259 கோடிகளாக இருந்தது, 1955-’56-ல் 666 கோடிகளாக உயர்ந்தது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்ருவது ஆண்டில் 981 கோடிகளாக மீண்டும் உயர்ந்தது. 1961-’62-ம் ஆண்டில் ரூ 1,166 கோடி முதலீடு செய்யப்படும் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இது, 1965-’66-ம் ஆண்டில் 2500 கோடி ரூபாய்களாக உயரும். இப்படிப் பொதுத்துறையில் முதலீடு செய்யப்பட வேண்டிய பெருந்தொகையினைபெறுவதற்கு அதிகப்படியான வரி விதித்தலும் ஒரு வழியாகக் கையாளப்படுகின்றது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் மொத்த முதலீடான ரூ 2012 கோடியில் 557 கோடி ரூபாய்கள் வரிவிதிப்பு வருவாயின்மூலம் கிடைத்ததாகும். இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் அதிகப்படியான வரிவிதிப்பின்மூலம் கிடைத்தது ரூ 241·31 கோடிகளாகும். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் வெளியிடப்பட்ட நேரத்தில், 1956 மார்ச்சு மாதம் 31-ந் தேதியில் நிலவிய வரி நிலமைகளின்படி ரூ 350 கோடி அதிகப்படியாகக் கிடைக்கும் என்றுசொல்லப்பட்டது. மேலும், திட்டகாலத்தில் ரூ 400 கோடிக்கு கூடுதலான வரிவிதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. ‘எஸ்டிமேட் கமிட்டி’ அறிக்கையின்படி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் வெளியிடப்பட்ட நேரத்தில் அதிகப்படியான வரி விதிப்பின் மூலம் கிடைத்த தொகை ரூ 498 கோடிகளாகும். இந்திய அரசாங்கத்தின் வரவு-செலவுஅறிக்கையினை சமர்ப்பித்துப் பேசிய நேரத்தில் நிதி அமைச்சர் அவர்கள் இரண்டாவது திட்டகாலத்தில் மொத்த அதிக வரி விதிப்பின்மூலம் (Total additional taxation) கிடைத்த தொகை ரூ 1040 கோடிஎன்று தெரிவித்தார். இரண்டாவதுஐந்தாண்டுத்திட்டத்திற்குவரிவிதிப்பின்மூலம் எழுப்பியமொத்த தொகை ரூ 1538 கோடிகளாகும். ஆனல்இவற்றில் ரூ 900கோடிகள்மட்டுமே திட்டங்களுக்காகச் செல விடப்பட்டிருக்கின்றது. எஞ்சியுள்ள ரூ 638 கோடியும் திட்டத்திற்குச் சம்பந்தமில்லாத வகையில் செலவிடப்பட்டிருக்கின்றன.

திட்டங்களுக்காக பொதுத்துறையில் முதலீடு செய்வதற்கு வரிவிதிப்பின்மூலம் பணம் திரட்டப்பட்டு, திட்டங்களுக்கு எவ்வகையிலும் சம்பந்தமில்லாத துறைகளில் பெரும்பகுதி செல விடப்படுவது வருந்தத்தக்க ஒன்ருகும். இப்படி வேறு வகைகளில் செலவாகின்ற உண்மையினை அரசாங்கமே ஒத்துக்கொண்டிருக்கிறது என்பதை கீழ்க்கண்ட வாசகங்களில் இருந்து நாம் அறியலாம்.

“Public revenues have increased significantly over the last three years Partly as a result of Tax measures adopted and partly in Consi-quence of the rise in money income. The Proportion of Public revenue to national income hos gone up form 9·1·/. in 1955-’56 to about 10 /.; but that rise has heen Obsorbed more or less by the increase in the non—development expenditure. In Consequence the reliance on borrowings from the public, from the Banking system and from.abroad for financing The plar han tended to rise.”

[Economic Survey 1958-’59]

‘கடந்த மூன்று ஆண்டுகளாக கடைப்பிடிக்கப்பட்ட வரிவிதிப்புக் கொள்கை மூலமும், பண வருவாயில் ஏற்பட்ட கணிசமான ஏற்றத்தின் காரணமாகவும் பொது வருவாய் குறிப்பிடத் தகுந்த அளவுக்கு உயர்ந்திருக்கின்றது. ஆனல் அந்த ஏற்றம் திட்டங்கள் அல்லாத செலவினங்கள் உயந்ததனல் ஈர்த்துக் கொள்ளப்பட்டது.’ என்று அதிலே கூறப்பட்டிருக்கின்றது. அதன்விளைவாகப் பொதுமக்களிடத்தில் கடன் எழுப்புதல் பாங்க் முறை, வெளிநாட்டு உதவி - இவற்றில் இருந்து அதிக அளவுக்கு எதிர்பார்க்கப்பட்டது’ என்றும் கூறப்படுகிறது.

இப்படி தேசிய வருமானத்தில் (National income)ஒரு சதவிகிதம் திட்டங்கள் அல்லாத வகைகளுக்காக செலவு செய்யப்பட்டது. இந்த தொகை வருடம் ஒன்றுக்கு ரூ 120 கோடிகளாகும். எஸ்டிமேட் கமிட்டியின் 92-வது அறிக்கையின்படி சுமார் ரூ 604கோடி அதிகப்படியான வரி விதிப்பின்மூலம் கிடைத்த வருவாயில்இருந்து, திட்டமல்லாத செலவினங்கள் உயர்ந்ததனல் செலவு செய்யப்பட்டிருக்கின்றது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 2000 கோடி வரி விதிப்பின் மூலம் கிடைக்கலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கிடைக்கக்கூடிய ரூ 350 கோடியும் அதிக வரி விதிப்பின் (Additional taxa tion) மூலம் ரூ 1650 கோடியும் ஆக 2000 கோடி ரூபாய்கள் என்று சொல்லப்படுகிறது.

ஆனல், தற்போது நிலவுகின்ற வரி விதிப்பின்படி ரூ 1600 கோடி இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட முடிவில் கிடைக்கக்கூடும். திட்ட நகலில் (Draft outline) ரூ 350 கோடிதான் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. எஞ்சியுள்ள 1250 கோடி ரூபாய் திட்டத்திற்கு சம்பந்தமில்லாத வகையில் செலவு செய்யப்படும்! இவற்றையும் சேர்த்து திட்டச் செலவுக்காக வரிவிதிப்பின்மூலம் கிடைக்கின்ற வருமானம் 3250 கோடி ரூபாயாகும் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீட்டில் 27 சதவிகிதம் வரிவிதிப்பின்மூலம் கிடைத்ததாகும். இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட முதலீடான ரூ 4600 கோடியில் 33 சதவிகிதம் வரிகள்மூலம் கிடைத்திருக்கின்றது. மூன்ருவது ஐந்தாண்டுத் திட்டத்தில், திட்டங்களுக்காகவே முழுவதும் செலவு செய்யப்பட்டால், வரி விதிப்பின்மூலம் கிடைக்கின்ற வருமானம் 33சத விகிதத்தில் இருந்து 43 சத விகிதமாக உயரும். இப்படிமத்திய அரசும், மாநில அரசும் திட்டங்களுக்காக வரிவிதிப்பின்மூலம் அதிகமான பணத்தினை திரட்டிக்கொண்டிருக்கிறது. திரட்டப்படுகின்ற பணம் திட்டங்களுக்காகவே செலவு செய்யப்பட வேண்டும். ‘வருங்கால வாழ்விற்காக இன்று தியாகம் செய்யுங்கள்’ என்று கூறுகிற அதே நேரத்தில் தாங்கமுடியாத அளவுக்கு வரியின் மூலம் தரப்படுகின்ற பணம் எதற்காகத் திரட்டப்படுகின்றதோ அவற்றிற்காகவே செலவு செய்யப்பட வேண்டும் என்பதை அரசு உணர வேண்டும்.

1952-55-ல் வரிகள் மூலமாக கிடைத்த வருமானம் மத்திய அரசாங்கத்திற்கு ரூ 444 கோடி; 1961-62-ல் அது ரூ 708 கோடியாக இருக்கும். மாநிலங்களைப் பொருத்தவரை, 1952-55-ல் வரிகள் மூலமாகக் கிடைத்தது ரூ 231 கோடி; 1961-62-ல் அது ரூ 442 கோடியாக உயரும். மூன்ருவது திட்டத்தில் வருடம் ஒன்றுக்கு ரூ330 கோடி வரிகள் மூலம் திரட்டப்படலாம். இவ்வளவு பெருந்தொகை திரட்டப்படும்பொழுது அவை சரியான வகையில் பயன்படுத்தப்படுகிறது என்ற உறுதியினை அரசாங்கம் மக்களுக்குத் தெரிவிப்பது கடமையாகும்.

★

உணர்கின்ருயா ?

(கவிஞர் இரும்பொன் வில்லாளன்)

கன்னடமும் கேரளமும் களிதெலுங்கும்
  கனித்தமிழோ டிணைந்திலங்கக் காண்போம் என்றே
இன்னமுமா பேசுகிருய் ? பேசிப் பேசி
  எந்நாளில் நின்ருட்டைத் தமிழ்ப்பொன்ருட்டை
அன்னியர்கள் பிடியினின்றும் அகற்றுவாயோ ?
  அயலார்கள் உனைக்கண்டு நகைக்கின் ருரே !
உன்னுடைய பயனில்லாப் பேச்சும் போக்கும்
  உருக்குலையக் காண்கின்ரேம் உணர்கின்ருயா ?

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஒதுங்கக் கூடிய அளவிலும இருந்தமை பாராட்டத் தக்கதாகும்.

தன்னை ஒரு 'வழிகாட்டி' என்று தன் தம்பிமார்கள் முறை போட்டுக் கொண்டு மேடையில் முழங்க வேண்டுமெனக் கருதியவர்கள் இருக்கும் தமிழகத்தில் மராட்டியத்திலிருந்து வருகிறார் என்ற விளம்பரம் செய்து கொண்டு ஒரு பரபரப்பை ஏற்படுத்தாமல், வந்த உழவர் தொழிலாளர் கட்சித்தலைவர் இந்தியத் துணைக்கண்டமறிந்த ஒரு அரசியல்வாதி. பாராளுமன்ற உறுப்பினர், தோழர் தேசாய் அவர்கள். "இந்தியாவில் ஒவ்வொரு மொழி வழி தேசிய இனத்திற்கும் பூரண சுதந்திரம் வேண்டும் என்று தோழர் சம்பத் அவர்கள் ஒரு புதிய சிந்தனையைத் தந்திருக்கிறார். இந்தத் தத்துவம் இந்தியாவின் எல்லா மாநிலங்களுக்கும் ஒரு "வழிகாட்டி யாகுமென நம்புகிறேன்" என்று குறிப்பிட்டுள்ளார்கள். வள்ளுவருக்குப்பின் வந்த வழிகாட்டி என மேடையதிர முழக்க மிட்டவர்கள் உளமாரச் சிந்தித்துப் பார்த்தால் வழிகாட்ட வந்தவர் யார் என்றாவது தெரிந்து கொள்வர்.

வறட்டு வாதத்தை அவிழ்த்து விடும் நாலந்தரங்கள் புரிந்து கொள்ளும் வகையில், தோழர் சம்பத் அவர்களின் "தமிழ்நாடு தமிழருக்கே" என்ற நெடுநாளைய கோரிக்கைக்கும் தமிழ்த் தேசியக் கட்சியின் இப்போதைய முழக்கத்திற்கும் நிறைய வேறுபாடு உளது. முன்னையக் கோரிக்கை வடவரையெல்லாம் எதிர்க்கும் தன்மையுடையது. ஆனால் நாம் சொல்லுவதோ தமிழ்நாடு போன்ற இதரத் தேசிய இனங்களும் தனித்தனி நாடாக இருக்கலாம். அந்த நாடுகளோடு நாம் நட்புறவோடு இருப்போம். இதனால் தமிழகத்தின் மீது வீணான கசப்புணர்ச்சி வேறு எந்த மாநிலத்தவருக்கும் ஏற்பட முடியாது" என விளக்கம் கூறினார்கள். இனம் என்று கூறி மனப்பகையை வளர்த்துக் கொண்டு, முடியாத லட்சியத்திற்கு முஸ்தீப்பு காட்டும் மூலவருக்கு மூளைக் குழப்பம் ஏற்படாமலா இருக்கும்.

மாநாட்டின் அரசியல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட விதமும், பிரதிநிதிகள் கூடிக் கலந்து வாதித்த அழகும் தனிச் சிறப்பு வாய்ந்தது. 13 ஆண்டில் திராவிட நாடு திராவிடருக்கே என்ற அடிப்படை லட்சியத்திற்கு தீர்மானம் போட்ட விநோதத்தைக் கண்டவர் இதைக் காணும்போது ஈதல்லவா அரசியல் என்கின்றனர். மற்றவர் கொடுத்த திட்டமாயினும் அதையேற்று செயல்படுத்துகின்ற துணிவினைக் கண்டோர், தம்பி! முன்மொழியும் பாக்கியத்தையாவது எனக்களிக்கக்கூடாதா என்று கேட்ட பழைய தலைவரின் தரத்தை புரிந்துகொள்ளாமலா இருப்பர். இக்கட்டுப்பாட்டை கண்டதால்தானா என் தலைவா! நின்னை பொதுக்குழுவில் தாக்கினர் என்று தொண்டர் நரம்பெல்லாம் புடைத்ததோ?

"யான் பெற்ற பேறு பெறுக இவ்வையம்" என்ற தமிழ் மறைக்கொப்ப, எல்லா மாநிலத்திற்கும் வழிகாட்டும் தத்துவம் தந்த தலைவரைக் கண்டோர் வியந்தனர்.

மாநாட்டைக் கண்டவர் பெற்ற தெளிவு மூலவரும் பெற்றுவிட்டாரா? அல்லது மூளைக் குழப்பம்தானா! காரணம் விளங்கவில்லை, அவர் திருச்சியில் பேசிய பேச்சு "நான் திராவிட நாடுதான் வேண்டும். தமிழ்நாடுதான் வேண்டும். அது தான் நல்லது. என்று கூறவில்லை. பிரிந்துவருகிறாயா? அல்லது பிரிந்து சேருகிறாயா? இதுதான் கேள்வி" எனக் கழக லட்சியத்தை விளக்கியுள்ளார். இது தெளிவுபோலும். உடனே குழப்பம். திராவிடநாடு கேட்டால் சிறைதண்டனை சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். சட்டம் வந்தது முதல் நான் 31 கூட்டங்கள் பேசியுள்ளேன். என்னைக் கைது செய்யவில்லையே?" மதுரையில் பேசிய நெடுஞ்செழியன் "உரிமைக்கு தமிழ்நாடு, உறவுக்கு திராவிட நாடு, நட்புக்கு ஐக்கியநாடு" என்று கொள்கை விளக்கம் தந்துள்ளார். திராவிட நாட்டுக் கொள்கைக்கு எத்தனை உருவங்களோ? ஒவ்வொரு உருவத்தால் ஒவ்வொன்றாக அல்லவா விளக்கப்படுகிறது.

தமிழ்நாட்டின் எதிர்காலத்திற்கு ஒரு விடிவெள்ளி இம்மாநாடு. தமிழக மக்கள் நம்பிக்கைக்கு பாத்திரமானது தமிழ்த் தேசியக் கட்சி. இவைகளுக்கு காரணம் என் தலைவர் சம்பத்தே என்றால் மிகையுமுண்டோ?

★

வாணி தமிழ் இங்கிலீஷ் போதினி

தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் இந்தப் புத்தகத்தின் மூலம் பிறர் ஒத்தாசை இல்லாமல் இங்கிலீஷ் சுலபமாகப் படிக்கவும் பேசவும் கடிதங்கள் எழுதவும் கற்றுக்கொள்ளலாம் 704 பக்கங்கள் கொண்ட பெரிய பைண்டு புத்தகம்.

விலை ரூ. 5-00

V. P. செலவு ரூ. 1-25

ஐசுவரியம் (குடிசைக் கைத்தொழில்)

இதில் சோப், இங்கி, ஊதுபத்தி, வாசனைத் தைலம், மெழுகு வர்த்தி, ஸ்னோ பேஸ் பவுடர், சாம்பிராணி, பெனாயில் போன்ற200 கைத்தொழில் கொண்டது.

விலை ரூ. 4-00 ந, பை V. P. செலவு 0-85 ந. பை

வாணி தமிழ் இந்தி சுபோதினி தமிழைக்கொண்டு பிறர் உதவியின்றித் தானே இந்தி சுலபமாகப் படிக்கவும் பேசவும் கற்றுக் கொள்ளலாம்.

விலை ரூ. 2-25 ந. பை. V. P. செலவு 85 ந. பை.

குடும்ப இலகு வைத்தியம்

இதில் பச்சிலை மூலிகைகள், கடைச்சரக்குகள் நவதான்யங்களைக் கொண்டு சிறியோர் முதல் பெரியவர்கள் வரை சிகிச்சை பெறும் முறைகளும் ஆரோக்கியம், பலம். ஆண்மை பெறுவது போன்ற அநேக வைத்திய ரகசியங்களும் அடங்கியது.

விலை ரூ. 2-50. V. P. செலவு ரூ. 1-00

VANI BOOK DEPOT
3, மலையபெருமாள் தெரு,
Post Box No. 239, Madras-1.

—4-ம் பக்கத் தொடர்ச்சி—

புகைவளர்தல் போல்தனது மண்ணிற் பூசல்
பொருகளமாய்ப் பெருகிவர முறைசெய் யாமல்
மிகைப்பயணம் பிறநாட்டார் வழக்குத் தீர்க்க
மணிப்புறவாய்ப் பறப்பதுதான் நகைப்பா மன்றோ?

பிறநாட்டார் அரணழித்துப் புகுதல் மட்டும்
பகையன்று; உறுபசியும் மிடியும் நோயும்
உறவொட்டிப் பெருகுவதும் பகையே யாகும்
இருட்பொழுதில், தனிவழியில், கண்ம றைவில்
கறவாடிப் பொருள்பறிப்போர் கொடிய தீயர்;
கடிந்தொழித்து நீக்குதற்கு உரிய ராவர்
திறல்நாட்டில் இவைபுரிதல் தனிலும் உண்டு
தமிழ்மறையோர் அரசியலில் காணும் உண்மை

ஆய்ந்தெதிலும் தெளிவோடு தெரிந்தே பேசல்
அடக்கமுடன் தெரிந்தவற்றைச் செயலில் நாட்டல்
வாய்ந்தவுயர் கல்வியெலாம் அரசின் சீர்மை;
வாயுண்டு வட்டமிடும் காவல் உண்டு
பாய்ந்துவரு எதிர்ப்படக்கத் திறமை யுண்டு
பார்த்திடுவேம் எனவீம்பும் வேண்டா செய்தல்
காய்ந்துவிழும் ஒருநாளில் கீழ்மை சூழக்
காலமெலாம் பழிநிற்கும் உலகம் தூற்றும்!

குடிப்பெருமை அரசியலில் நிழலாய்க் காட்டும்
குற்றமெனில் குடிப்பிறப்பே முதலில் நிற்கும்
வடிப்பமைந்த வேலொன்றே வென்றி நல்கா
வகையோடு அதன்வலியைப் படுத்தல் வேண்டும்.
இடிப்பாரி லாதவொரு அரசின் கொற்றம்
இயல்பாகத் தேய்வடையும் சூழும் குற்றம்
நொடிப்பொழுதும் மனந்தூய ரல்லார் நட்பு
நண்ணாத பான்மையினால் துன்பம் சேரா.

நாணுடைமை அரசிருப்போர் பண்பி லொன்று
நல்லோரின் சேர்க்கையதற் கொளிமை யூட்டும்
வாணுதலார் காமத்தை நச்சிப் போதல்
வழியடைக்கும் நேர்மைக்கும், ஒழுக்க மென்னும்
பூணுடைமை தானதற்கும் குறுக்கீ டாகும்
புகழ்சிதையப் பிறவழிகள் நாடல் வேண்டாம்
ஆணுடைமை அறமுடைமை அனைத்தும் மாறும்
அழிவுக்குப் பெரும்பயணத் தொடக்க மாகும்

தானிருக்கை வீற்றிருக்கும் போதில் செம்மை
தாமிவைகள் எனப்புகன்று படையைக் காட்டி
ஏனிதற்கு எதிர்ப்பென்று மிரட்டிக் கேட்டு
ஏற்றமதைச் செய்வதுவாய்ப் பெருமை கொண்டோர்
தானிருக்கை இழந்தவுடன் தனிய னாகித்
துணிவோடு அவற்றினையே சாடி நின்று
வானவனின் மறுபிறப்பென் றழைப்பு நீட்டல்
வள்ளுவனின் அரசியலிற் 'கயமை' என்பார்

இருநாவும் எதுசெய்தும் பதவி வேண்டல்
ஏலாத கொள்கைக்கெலாம் வாழ்த்துக் கூறல்,
உருவாகாப் பணிக்காக உழைத்துச் சோர்தல்
உலகமெலாம் அஞ்சுகின்ற அளவிற் சேரும்
பெரும்படையைப் பெற்றிருந்தும் கட்டுப் பாட்டைப்
பேணாது விருப்பம்போல் அலைதற் கொப்பல்
வருநாளில் பேரிழுக்கும் வீழ்வும் காண
வகையாகும் வாய்த்ததெலாம் கானல் போலாம்!

தலைமகனாய் அரசியலில் வாய்ப்புப் பெற்றோன்
தகுதியிலே தூயவனாய், வஞ்சப் பேச்சில்
விலைமகனாய் மாறாத பெற்றி சூழ்ந்தோர்
வெளிப்பகட்டில் மயங்காத உறுதி நெஞ்சம்
அலைவில்லா மனத்திட்பம் இவைக ளின்றேல்
ஆற்றலுடைத் துணைவரையும் இழத்தல் உண்மை
உலைக்களத்து இரும்பாக மடிந்து நொந்து
ஒன்றுமிலை நீர்க்கசிவென் றழவே நேரும்!

வள்ளுவனும் முதற்கவிஞன் கண்டு வைத்த
வாழுகின்ற வாழவைக்கும் அரசு என்னும்
தெள்ளியதாம் முறையினிலே சிலவே சொன்னேன்
தெரிந்திடவும் புரிந்திடவும் குறள்நா லுண்டு
ஒள்ளியராய், முறைபேணும் நலம்வி ளைக்கும்
உயர்நாட்டம் கொண்டோர்க்கு இனியகற் கண்டு!
உள்ளுவரோ வள்ளுவன்நம் கவிஞன் கண்ட
உயர்முறைமை கோலோச்சும் பெற்றி யோரே!

'தமிழ்வழியே வள்ளுவனைக் காணும் பேறு'
சாற்றிடவும் வேண்டுமோஇம் மெய்மைக் கூற்று!
தமிழ்வாழ்ந்தால் குறள்வாழும் நாமும் வாழ்வோம்!
தமிழ்தான்நம் உயிரென்றால் மறுப்பா ருண்டோ?
தமிழாலே கூட்டுக்குள் பிழைப்போர் சில்லோர்
தாழ்ந்தவர்கள் கிடக்கட்டும் பின்னர் பார்ப்போம்
தமிழுக்குத் தீங்கின்று சூழ்கின் றகொடுமை
தடுத்திடுவோம்! வென்றிடுவோம்! அரசும் காண்போம்!

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

இந்தப் புதிய தொழிற்சங்கம், னது கொள்கையை காங்கிரஸ் ்சியின் கொள்கை அடிப்படை ே, உருவாக்கிக்கொண்டது. முதலாளித்துவ எதிர்ப்பை கக் கொள்ளாமல், பாருளாதார அபிவிருத்தி பார்வையில், முதலாளித் டு ஒத்துழைத்து சகல கைகளையும் நேசபாவத் டேற்றிக்கொள்ள வேண்டு கொள்கைப் பிரகடனம் .

ங்கட்சிக்கும், அதை ஆட்டி ும் முதலாளிவர்க்கத்திற்கும் புதிய தொழிற்சங்கம் போற் க்க பாதுகாப்பு அரணாக விளங் தால் இதன் கோரிக்கைகள் ரை வில் கவனிக்கப்பட்டு, நாளடை வில் இதன் செல்வாக்கும் தொழி லாளரிடையே பெருகி வந்தது.

இந்தியதொழிற்சங்க வரலாற்றில் மகத்தான பல சாதனைகளுக்கும் தியாகங்களுக்கும் எடுத்துக் காட் ாக விளங்கிய அ. இ. தொ. ச. காங்கிரசும், இந்து மஸ்தூர் சபாவும் லங்குன்றும் அளவுக்கு இந்தப் புதிய சங்கம் இன்று வளர்ச்சி டைந்து வருகிறது.

இந்த வளர்ச்சியைப் பற்றி குறிப் டுகின்ற காங்கிரஸ் கட்சியினர், தொழிற்சங்கத்தை அரசியலில் சம் ந்தப்படுத்தாமல் தூய நோக்கத் தாடு செயற்பட்டதன் வெற்றியே இது என்றும் கூறுகின்றனர். ஆனால், உண்மையில், சம்பந்தப் ட்ட தொழிலாளர்களை சோசலிஸ இலட்சியத்தின்றும் விடுவித்த தோடு அமையாமல், மாதிரி சோச லிஸமென்ற தங்களின் பிற்போக் கான கருத்தோட்டத்தில் நம்பிக்கை டி தேர்தல் காலத்தில் 'ஓட்டுக்' ் சூறையாடவும்செய்கின்றனர். னவே, தொழிற்சங்க இயக்கத்தை சலிஸ்டுகள் பயன்படுத்துவது போன்றே, பிற்போக்குவாதிகளும், தங்கள் அரசியலுக்கு ஆதரவாகப் பயன்படுத்துகின்றனர் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆனால், மாதிரி சோசலிஸ்டு களான காங்கிரஸ் கட்சியினரின் இதே கொள்கைகளையே சோசலிஸ சமதர்மவாதிகளான தி. மு. க. வினரும் கடைப்பிடித்து வருவது நமக்கு வியப்பையளிக்கிறது.

'தொழிற்சங்கம் அரசியலுக்கு அப் பாற் பட்டது' என்று கூறிவந்த அவர்கள், இன்று 'அரசியலின்றி தொழிற்சங்கம் வளர முடியாது' என்று கருத்து தெரிவிக்கின்றனர் என்றாலும், யதார்த்தத்தில் அவர் கள் போக்கு கிஞ்சித்தும்மாறவில்லை என்பதை சில சான்றுகளைக் கொண்டே யூகித்து அறியலாம்.

முதலாவதாக, தி. மு. க். வை இயக்கி வரும் தலைமையினர் அனை வரும் மத்திய தரவர்க்கத்தைச் சார்ந் தவர்கள் என்பதால், அந்த வர்க்கத் திற்குரிய இயல்புப்படி, முதலாளித்து வத்தின் செல்வச் செழிப்பின் மீது தணியாத மோகம் அவர்களை ஆட் கொண்டு விட்டது.

அதாவது தாங்களும் செல்வந்தர் களாக வேண்டுமென்ற ஆவல் அவர்களை அடிமைப் படுத்தி விட் டது.

இதன் காரணமாக அவர்களின் சிந்தனை புரட்சிகரமான கருத் தோட்டங்களில் நாட்டம் கொள் வதற்கு மாறாக, மிதவாத எண்ணங் களில் அமிழ்ந்துவிட்டன.

உதாரணமாக, புரட்சிகரமான த்தோவியம் என்று இவர்கள் றிமுகப்படுத்திய திரைக்கதைகள், டகங்கள் ஆகியவற்றின் முடிவு கள் அனைத்தும் உண்மையில் புரட்சி கரமாக அமைவதில்லை. மாறாக, 'தார்மீக சோஷலிச' வாதிகள் கூறு வதைப்போல, கதைகளில் சம்பந்தப் பட்ட முடிமன்னரோ, நிலப்பிரபுவோ மனமுவந்து தனது உடமைகளை பொதுமைப்படுத்துவதாகவே அமைந்திருக்கும்.

இந்தத் தவறான மிதவாத கருத் தோட்டம், சம்பந்தப்பட்ட தி.மு.க. தலைவர்களை செல்வச் சீமான்களாக்கி விட்டிருந்தபோதிலும், கட்சித் தோழர்களின் கவனத்தை வெகு தூரம் பின்னுக்குத் தள்ளிவிட்டிருக் கிறதென்பதை யாரும் மறுக்க முடியாது.

இரண்டாவதாக, மேற்குறித்த கருத்தோட்டங்கள் நடைமுறைப் படுத்தப்பட்ட நிலையில், அதாவது, தி. மு. க.வினர் தொழிற்சங்கத்தை ஏற்று நடத்த முற்பட்டபோது, அந்த தொழிற்சங்கங்கள் பெரும் பாலும் காங்கிரஸ் கட்சி சார்புடைய 'இந்திய தேசிய தொழிற்சங்கக் காங்கிரசின்' பாதையிலேயே வழி நடத்தப்பட்டன என்பதும், சில சந்தர்ப்பங்களில் அவற்றோடு இணைந்தும் செயற்பட்டன என்ப தும் ஊரறிந்த உண்மைகளாகும்.

மேலும், சான்றுக்காக ஒரு நிகழ்ச்சியையும் இங்கே குறிப்பிட லாம். 'சென்னை அரசினர் போக்கு வரத்து நிறுவனத்தில்' குறிப்பிட்ட ஒரு தொழிற்சங்கத்தை மட்டும் அங்கீகரிப்பது என்ற பிரச்சினை எழுந்தபோது, அங்கு ஏற்கனவே இயங்கிவந்த மூன்று தொழிற்சங் கங்களுக்கிடையே ஏதேனும் ஒரு தொழிற்சங்கத்தை தேர்ந்தெடுக்க வேண்டிய பொறுப்பு தொழிலாளர் களிடம் விடப்பட்டு அதற்கான ஒரு தேர்தலும் நடைபெற்றது.

அந்தத் தேர்தலில் காங்கிரஸ் தொழிற்சங்கத்திற்கும் கம்யூனிஸ்ட் தொழிற்சங்கத்திற்கும் தீவிரப்போட் டியிருந்தது. அப்போது தேர்தலில் கலந்துகொள்ளத் தகுதியற்றிருந்த தி. மு. க. தொழிற்சங்கம் பகிரங்க மாகவே காங்கிரஸ் தொழிற் சங்கத்தை ஆதரித்து வாக்களித்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அதன் தலைவராயிருந்த தோழர் நாஞ்சில் மனோகரன் சென்ற இடமெல்லாம், உலகெங்கிலுமுள்ள கம்யூனிஸ்ட் கட்சிகளை மட்டரகமான பாணியில் விமர்சித்துக் கொண்டிருந்தார். ஆனால், தேர்தலின் முடிவு கம்யூ னிஸ்ட் தொழிற்சங்கம் வெற்றி பெற்றதாகவே அமைந்தது.

மூன்றாவதாக, தி. மு. க. சார் புடைய தொழிற்சங்கங்கள் அனைத் தும், திறனற்ற தலைமையின் காரணமாக நெறிப்படி செயற்பட முடியாமல் இன்றளவும் ஊசலாடிக் கொண்டிருப்பதைநோக்குகிறபோது சோசலிஸத்தை நிர்மாணிக்கும் பணி யில் தொழிற் சங்கத்தை ஈடுபடுத் தும் முயற்சியில் தி. மு. க. வெற்றி பெறுதென்பதை உறுதியாக நம்ப லாம்.

நான்காவதாக திறனற்ற தலைமை யில் இயங்கிவரும் அந்த தொழிற் சங்கங்களும் நாளடைவில் நசித்து விடுமென்று எதிர் பார்க்கலாம்.

எனவே, மேற்குறித்த நிலையில் இயங்கிவரும் தி. மு. க. தொழிற் சங்கங்கள் இனி அரசியலில் ஈடு படுத்தப்படும் என்ற புதிய அறிவிப் பின் காரணமாக ஏதோ புத்துயிர் பெற்றுவிடக் கூடும் என்று யாரும் எதிர்பார்க்கத் தேவையில்லை.

இந்த அறிவிப்பு வெறும் தேர்தல் 'ஸ்டண்ட்' என்பதற்கு அண்மையில் நடைபெற்ற தி. மு. க. சலவை யாளர் மாநாடே சான்று பகர் கின்றது.

தி. மு. க. மூலவர் முதல் கடை யவர் ஈறாகக் கலந்து கொண்ட அந்த மாநாடு, அலங்காரச் சொற் பொழிவுகளால் வெகுவாக சிறப்பிக் கப்பட்டதென்று 'நம்நாடு' அறிவிக் கிறது.

ஆனால் அந்த மாநாட்டை நடத் திய முன்னேற்ற சங்கத்தைக் குறிப் பிடும்போது கழகத் தோழர்கள் சிலரால் நடத்தப்படும் சங்கம் என்று குறிப்பிட முடிந்ததே தவிர, சலவைத் தொழிலாளர்களால் நடத் தப்படும் சங்கம் என்று கூறமுடிய வில்லை.

உண்மையில் அந்தச் சங்கம் விரல்விட்டு எண்ணக் கூடிய சில தோழர்களால் உருவாக்கப் பட்டதே யாகும். மேலும், அந்தத் தோழர் களுக்கு சலவையாளர்களிடம் எவ் விதத் தொடர்புமில்லை. குறிப்பாக ஏதேனும் ஒரு சலவைத் தொழி லாளர் சங்கத்தில் தொடர்ந்து ஓராண்டுக் காலம் சேவை செய்து பயிற்சிபெற்ற தோழர் ஒருவர் கூட அந்த சங்கத்தில் இல்லை. ஏதோ, **டிரேட் யூனியன்** சட்டப்படி ஏழு தொழிலாளிகளைக் கொண்ட ஒரு சங் கம் பதிவுசெய்து கொள்ளலாம் என்றிருப்பதற்கு ஒப்பவே மேற்படி சங்கம் உருவாக்கப் பட்டுள்ளது.

இந்த இலட்சணத்தில் அந்த மாநாட்டு மேடையில் முழங்கிய தி.மு.க. மூலவர், 'தொழிலாளருக்கு அரசியல் கூடாது என்பது ஏமாற் றுப் பேச்சு' என்று யாரையோ இடித்துரைப்பது போன்று பேசிய தன்மூலம், தானும் தொழிலாளரை ஏமாற்றிக்கொண்டிருப்பதை ருசுப் படுத்தியுள்ளார்.

சலவைத்தொழிலாளர்களே கலந்து கொள்ளாத ஒரு மாநாட்டில், சலவைத் தொழிலாளரின் நலனை தி. மு. க. பிரதிபலிக்கிறது என்று பொய்யுரைத்த அவர், எந்த அடிப் படையில் தொழிலாளரை அரசிய லில் சம்பந்தப்படுத்தியிருக்கிறார் என்றால், அடுத்துவரும் தேர்தலில் தி. மு. க.விற்கு வாக்களியுங்கள் என்ற கோரிக்கையின் மூலமே யாகும்.

சென்ற நகரசபை தேர்தலில் சில இடங்களில் சலவைத் தொழிலாள ரிடம் வாக்குறுதி கொடுத்துப்பெற்ற 'ஓட்டு'க்களுக்கு கைம்மாறாக இது காறும் எவ்வித நன்மையும் செய் யாத தி. மு. க-வை சலவைத்தொழி லாளர்கள் இனியும் எப்படி நம்பு வார்கள்?

மேலும், தனது கட்சிக்கொடியின் கீழுள்ள ஒரு தொழிற்சங்கத்தை தேர்தலில் மட்டும் பயன்படுத்துவ தின்மூலம், தொழிற்சங்கத்தை அரசியலில் முழுமையாக சம்பந்தப் படுத்திவிட்டதாக எவ்வாறு கருத முடியும்?

சோஷலிசத்தை இலட்சியமாகக் கொண்ட தி. மு. க. அந்த இலட் சியத்தை முன்மொழியும் சகல அம்சங்களிலும் தொழிற்சங்கத்தை முதன்மைப்படுத்தினால் அல்லவா, அதன் இலக்கு உண்மையான சோஷலிசத்தை நோக்கியதென்று கூறமுடியும்?

அவ்வாறன்றி, தேர்தல் காலத்தில் மட்டும் தொழிற்சங்கத்தை அரசிய லில் சம்பந்தப்படுத்துகிறார்களென் றால் அது, முதலாளித்துவ ஜன நாயகவாதிகளின் பித்தலாட்ட மென்றுதானே கருதமுடியும்?

எனவே, சொல் வேறு செயல் வேறுபட்ட நிலையில், அரசியல் சூதாட்டத்தை நடத்திக்கொண்டிருக் கும் தி. மு. க., சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பணியில் இனி எக் காலத்தும் வெற்றி பெறுதென்றே அதன் இன்றைய நடைமுறைகள் உறுதிப்படுத்துகின்றன.



த. தே. க மாநாட்டில் தொண்டர் படைத் தலைவர்களில் ஒருவராகப் பணியாற்றிய தோழர்
தி. ப. ரங்கநாதன் எம். சி.

அடுத்தபடியாக, தமிழகத்தைப் பொறுத்தமட்டில், சோஷலிசத்தை நிர்மாணிக்கும் பணியில் வெற்றி பெறக்கூடிய அரசியல் சக்திகள் எவை என்பதை ஆராயப் புகுவோ மானால், நாம் எளிதில் இனம் கண்டு கொள்ளுமளவிற்கு, மூன்று கட்சி கள் நம்மை எதிர்நோக்கிக்கொண் டிருப்பதை உணரலாம். அவை, தொழிற் சங்கத்தை அரசிய லில் முதன்மைப்படுத்திச் செயற் பட்டுவரும் கம்யூனிஸ்ட் - சோஷ லிஸ்ட் கட்சிகளும், தொழிலாள வர்க்கம் ஆட்சிப் பொறுப்பை மேற் கொள்ளும் அளவிற்கு விழுமிய பொருளாதார திட்டங்களையும், அவற்றோடு தொழிலாளவர்க்கத்தை முதன்மைப்படுத்தி அரசியலில் பிரவேசித்துள்ள தமிழ்த் தேசியக் கட்சியுமேயாகும்.

இந்த மூன்று கட்சிகளில், முத லிரண்டும் நமது உறவுக்குரியதாக வும், மூன்றாவது நம் உரிமைபாத்தி யதைக்கு உட்பட்டதாகவும் அமைந் திருப்பது, நமக்கும் நாட்டிற்கும் நற்பேறெனில் மிகையாகாது.

★

வீரிய விர்த்தி மாத்திரை

மித மிஞ்சிய உஷ்ணத்தினாலும், அமித போகத்தினாலும், தாது நீர்த்துப் போகுதல் சொர்ப்பன ஸ்கலிதம் (இந்திரிய ஸ்கலிதம்) தாதுக்குறைவு, நரம்பு தளர்ச்சி, சக்திகுறைவு, இவைகளை நீக்கி, இந்திரியத்தை கெட்டிப்படுத்தி, சர்வநாடி நரம்புகளுக்கும் வலு வைக் கொடுக்கவல்ல மிகச் சிறந்த வீரிய மாத்திரை.

24 மாத்திரை புட்டி ரூ. 6-00

லேபனம் மெழுகு

குறி, சிறுத்துப் போகுதல், சுருங்கும் தன்மையடைதல், தளர்ச்சியடைதல், உறுதியின் மை ஆகியவைகளுக்கு மேற் பூசும் மெழுகு.

1 அவுன்சு புட்டி ரூ. 4-00

தேவைக்கு எழுதவும்:
சித்தவைத்திய பண்டிட்
எஸ். வி, ஆர். கண்டர்,
ஆர். ஐ. எம். பி.
இராஜசித்த வைத்தியசாலை
சேலம்-2 (S. I.)

வரலாற்றில் தடுமாற்றம் !

எனது **'மாங்கனி'**க் காவியத்தில் ஒரு இடத்தை எடுத்துக் கொண்டு விமர்சனம் செய்யவந்த ஒரு தீவட்டி, யாரோ ஒரு அப்பாவிப் புலவரிடம் எழுதி வாங்கியதைதான் எழுதியது போல் வெளியிட்டிருக்கிறது. பாவம்! இரவல் தந்து பிழைப் போர் சிலர்; இரவல் வாங்கிப் பிழைப்போர் சிலர்; போகட்டும் !

ஆனல்............

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் என்பவன் யார்?

அதே பெயரைத் தனக்குச் சூட்டிக் கொண்டவர்கள் எத்தனை பேர்?

சிலப்பதிகாரத்தின் காலம் யாது ?

சேரன் செங்குட்டுவனுக்குச் சம காலத்தவர் எவரெவர்?

கொற்கையை ஆண்டவன் என்று கூறப்படும் பாண்டியன், மடிந்த நெடுஞ்செழியன் மகன் தானு?

சரித்திரத்தில், தமிழ்ப் புலவர்களுக்குள் ஏற்ட்ட்ட தடுமாற்றங்கள் என்னென்ன ?

அந்த முரண்பாடுகளுக்கு முடிவான ஒரு கருத்து உண்டா?

தலையாலங்காலத்துச் செறு வென்ற நெடுஞ்செழியன் யார்?

'தென் தமிழ்நாடு ஒருங்கு கண்டவ'ன் சிலப்பதிகாரத்தில் வரும் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியனென்ருல், அவன் காலத்தில் சேரநாடும் சோழநாடும் தனித்தியங்க வில்லையா ?

இல்லையேல், 'தென் தமிழ்நாடு' என்பது பாண்டிய நாட்டை மட்டும் குறிப்பதா ?

செங்குட்டுவன் அவைக்கு, ஆரியப்படை கடந்த நெடுஞ் செழியன் என்ெருருவன் வந்ததாக நான் எடுத்துக் கொண்ட ஆதாரம் எது ?

பாண்டிய நாட்டின் சரித்திர வம்சா வழி.

சேர நாட்டின் சரித்திர வம்சா வழி.

சோழ நாட்டின் சரித்திர வம்சா வழி.

இவற்றில் தடுமாறி மதிமாறிய பலரின் ஆராய்ச்சிகள்.

அவற்றில் ஏற்பட்ட மயக்கம்.

—இவற்றை தமிழ்ப்பெரும் புலவர் பலரின் மேற்கோள் களோடு தொடர் ஆராய்ச்சிக் கட்டுரையாக **4-11-61**-ந் தேதி **'தென்றல்'** இதழிலிருந்து எழுதுகிறேன்.

'தமிழர் திருமணத்தில் தாலி'க்குப் பிறகு நீண்டதோர் ஆராய்ச்சி வருகிறது.

இது—'திருவாரூர் தீவட்டி' தெளிவு பெறுவதற்காக மட்டு மல்ல, தமிழ்ப் பெருமக்கள், சில புலவர்களின் சரித்திரக் குழப் பங்களைக் கண்டு தெளிவதற்காகவும் எழுதப்படுகிறது.

கண்ணதாசன்

படிக்கத் தவருதீர்கள்:

4-11-61

தென்றல்

இதழில் ஆரம்பம்

அதிகப்பிரதி தேவைப்படும் விற்பனையாளர்கள் முன்னதாகவே எழுதுக

அறிவிப்பு

அன்புள்ள நண்பர்களே! எனது சொந்த வேலைகள் காரண மாக நவம்பர் 30-ந் தேதி வரை, எந்தப் பொது நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ள முடியாதவனுக இருக்கிறேன். கடிதங்களுக்குப் பதில்கூட எழுத முடியாத நிலையில், வேலைகள் அமைந்து விட்டன.

நான் ஒப்புக்கொண்டிருக்கும் கூட்டங்களைக்கூட், என் பதில் பார்த்தே ஏற்பாடு செய்யும்படிக் கேட்டுக் கொள்கிறேன். டிசம்பர் இறுதியில் இருந்து தேர்தல் வேலைகள் துவங்கிவிடும். ஆகையால் அக்டோபர் நவம்பரில் எனது சொந்த வேலைகளை முடிக்க வேண்டியவனுக இருக்கிறேன். சூழ்நிலை கருதி இந்த இரண்டு மாதங்களிலும் யாரும் என்னை அழைக்க வேண்டாமென மீண்டும் கேட்டுக் கொள்கிறேன்.

அன்பன்,

கண்ணதாசன்

மறைவு

இந்திய பொதுவுடமைக் கட்சியின் முன்னேடிகளில் ஒருவர் உழவர் பெருங்குடி மக்களின் துயர்துடைக்க சங்கம் [illegible] செம்மல், தன்னலமற்ற தொண்டர், உடும்புப் பிடியாய் [illegible] கையைப் பற்றிய லட்சியவீரர், கலப்புத் திருமணம் பு[illegible] கொண்டு செயலில் சீர்த்திருத்தம் செய்து காட்டிய செயல் [illegible] பொதுவாழ்விற்கு தன்னையே காணிக்கையாக்கிக் கொண்ட [illegible] வீரர், விடுதலைப் போராட்டத்தில் முன்னணியில் நின்ற அ[illegible] நெஞ்சம் படைத்தவர், தோழர் பி. **சீனுவாசராவ்** அவ[illegible] செப்டம்பர் திங்கள் 30-ம் நாளன்று. திருத்துறைப் பூண்டி[illegible] இயற்கையெய்தினர் என்ற செய்தி நமக்கு ஆருத்[illegible] தருகிறது. அவர் பிரிவால், தாயை இழந்த சேய்களைப்போ[illegible] வாடும் உழ்வர் பெருங்குடி மக்களுக்கும்; அன்னரின் சுற்[illegible] தாருக்கும் நமது நெஞ்சார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து[illegible] கொள்ளுகிறேம். (ஆ-ர்)

படித்தீர்களா ?

கோயபல்சும் அவன் குருநாதனும்

(பரபரப்பான வரலாறு)

தியாகன்

எழுதியது

80 பக்கங்கள், விலை 50 காசுகள்

★ ★ ★

விபரங்களுக்கு

தென்றல்

2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6

அக்டோபர் 27 முதல்

அக்டோபர் முதல் வெளிவருகிறது

அரசியல் வானில்

புதிய தீபச்சுடர் !

தன்னுட்சி

ஆசிரியர். ஏ.கே.வில்வம்

சூடான அரசியல் சுவையான இலக்கியம்

எழுத்துலகின் முக்கனிகளாம்

கதை, கவிதை, கட்டுரைகளோடு

வார ஏடாய் மலர்கின்றது

இது - தமிழர்களின் கைவிளக்கு !

இது - த.தே.கவின் கொள்கை முரசம் !!

இது - கட்சித்தோழர்களின் அறிவாயுதம் !!!

தமிழகமெங்கும் முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் உடன் எழுதுக

விபரங்களுக்கு

'தன்னுட்சி' 20, ராமானுஜலு கார்டன் தெரு சென்னை.12

ஆசிரியர் கண்ணதாசன். அச்சிடுபவர். வெளியிடுபவர்: லெ. வீரப்பன், ஏ. எல் எஸ். அச்சகம், 2/127 மவுண்ட்ரோடு, சென்னை-6 தமி[illegible]
தொலைபேசி எண் 83510.